# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பீ. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி அணா 4

மலர் 19 } டிசம்பர் 1958 { இதழ் 12


1958 MADRAS

## புதியதோர் காட்சி!
## அரியதோர் பாடம்!!

"விலைவாசிகளோ மிக அதிகம் — ஊதியமோ மிகக் குறைவு!"

"இப்படியே இருந்தால் எங்கள் நிலை — எப்படியாவது எங்கள் வாழ்வு?"

"பாலும் பழமும் வேண்டாம் — பசிக்கு உணவாவது வேண்டாமா?"

"பட்டும், பொன்னும் தேவையில்லை — கட்டத் துணியாவது தேவையில்லையா?"

"மாடமாளிகை கிடைக்க வேண்டியதில்லை — இருப்பதற்கோர் குடிசையாவது கிடைக்க வேண்டாமா?"

186336.

"ஆட்சியாளர்களே கவனியுங்கள் — அன்புகூர்ந்து ஊதியத்தை உயர்த்துங்கள்."

இப்படியெல்லாம்தான் முழக்கங்களை எழுப்பிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். பத்துப் பேர் அல்ல, இருபது பேர் அல்ல, ஏறத்தாழ மூவாயிரம் பேர் இத்தகைய கோரிக்கைகளை ஒலித்துக்கொண்டிருந்தார்கள் அந்தப் பெருங்கூட்டத்தில் ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் இருந்தார்கள். இளைஞர்கள் மட்டுமல்ல; முதியவர்களும் காணப்பட்டார்கள். கால் மணி நேரம், அரைமணி நேரம் அல்ல, ஏறத்தாழ மூன்றுமணி நேரம் இந்த முழக்கங்கள் தொடர்ந்து கேட்டபடி இருந்தன.

மூவாயிரம் பேர் ஒன்றுகூடி, தங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒலிமுழக்கங்களாக அமைத்து, அந்த முழக்கங்களை மூன்று மணி நேரம் எழுப்பிய காட்சி, 16-12-58 அன்று நடைபெற்றிருக்கிறது. நடைபெற்ற இடம், பீகார் மாநிலத்துச் சட்டமன்றத்துக் கட்டிடத்தின் நுழைவுவாயில் – முழக்கத்தை எழுப்பியவர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள் அல்லர்; வயல் வெளிகளில் பணியாற்றும் பாட்டாளித் தோழர்கள் அல்லர்; அரசாங்க அலுவலகங்களில் அமர்ந்துள்ள குமாஸ்தாக்கள் அல்லர்; அரசாங்க பஸ் சர்வீசில் வேலை செய்யும் டிரைவர்கள் கண்டக்டர்கள் அல்லர். அவர்களெல்லாம் இத்தகைய முழக்கங்களை எழுப்பியிருந்தால் அதிலே வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. அதனைப் புதியதோர் காட்சி என்று கூறவும் இயலாது. கூறினால், அது பொருத்தமாகவும் இருக்காது. ஏனென்றால் அவர்களெல்லாம் இத்தகைய முழக்கங்களை அடிக்கடி எழுப்பியிருக்கிறார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலங்களைப் பலமுறை நடத்தியிருக்கிறார்கள். ஆளவந்த அன்பர்களின் கேளாத செவிகளையும் கேட்கவைக்கும் முறையில் உரத்த குரலில் தங்கள் கோரிக்கைகளை எழுப்பிக் காட்டும் கிளர்ச்சி முறை அவர்களுக்கு மிகமிகப் பழக்கமானது ஒன்று.

ஆனால்; பீகார் மாநிலத்துச் சட்டமன்றத்துக்கு முன்னால் 16—12—58 அன்று ஒன்று இரண்டு கூடி கோரிக்கை முழக்கங்களை எழுப்பியிருப்பவர்கள் அந்த மாநிலத்து நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள். ஆமாம் — ஆசிரியப் பெருமக்கள்தான் அன்றையதினம் மூன்று மணி நேரம் முழக்கம் எழுப்பியிருப்பவர்கள். ஆகவேதான் அந்தக் காட்சி புதியதோர் காட்சியாகிறது. அதே காரணத்தால்தான், அரசாங்கத் தலைவர்களும் அந்தக் காட்சியிலிருந்து அரியதோர் பாடத்தைப் பெற்றாக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.



ஆசிரியர்களுடைய அரும்பணி பொறுப்பும் சிறப்பும் மிகுந்தது என்கிற மறுக்க முடியாத உண்மையை ஒப்புக் கொள்ளாதவர்கள் யாருமில்லை. "ஆசிரியப் பெருமக்களா — அவர்களல்லவா வருங்காலக் குடிமக்களை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள்!" என்று எழிலோவியம் தீட்டுகிறார்கள் பத்திரிகை ஆசிரியர்கள். "ஒரு நாட்டின் முன்னேற்றம் எப்படி அந்த நாட்டுக் கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறதோ, அப்படித்தான், கல்வியின் முன்னேற்றம், அந்தக் கல்வியை அள்ளித் தருகிற ஆசிரியர்களின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது" என்று காரண காரிய விளக்கம் தருகிறார்கள் அரசாங்க அதிகாரிகள். "எழுத்தறிவிக்கும் இறைவர்கள் என்று ஆசிரியப் பெருந்தகைகளை அந்த நாளில் சித்தரித்தார்களே செந்தமிழ்ச் சான்றோர்கள் — அது பொய்யா? யாராகட்டும், அதை மறுக்க முடியுமா ஐயா?" என்று அடுக்குத் தொடர்களை அமைத்து அற்புதமாகப் பேசுகிறார்கள் அரசியல் தலைவர்கள். "அடிப்படை இல்லையேல் உறுதியான கட்டிடம் இல்லை. அது போலவே ஆசிரியர்கள் இல்லையேல் சிறப்பான சமுதாயமும் இல்லை." என்று உவமான உவமேயத்தின் துணையுடன் உரையாற்றுகிறார்கள் நாடாள வந்தவர்கள். எட்டுத் திசைகளிலிருந்தும் புகழ் மாலைகள் கிடைத்தபடி இருக்கின்றன ஆசிரியர்களுக்கு. எல்லாத் துறையினரும், எல்லா நிலையினரும் அவர்களைப் பாராட்டிப் போற்றி வாழ்த்தியபடி இருக்கின்றனர். ஆனால், அவர்களுடைய வாழ்க்கையை வதைத்து வரும் வறுமையின் கொடுமையை விரட்டியடிப்பதில் ஆட்சியாளர்களும் சரி, ஏனையோரும் சரி, போதுமான அளவு அக்கறை காட்டுகிறார்களா என்றால், அதுதான் இல்லை. குறிப்பாகவும் சிறப்பாகவும், ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கையிலே ஓரளவு வசீகரத்தை வரவழைக்கவேண்டிய பொறுப்பு ஆட்சித் தலைவர்களுக்கு உண்டு—ஆனால், அந்த அமைச்சர் பெருமக்களோ புகழ்மாலைகளைச் சூட்டிப் போற்றித் திரு அகவல் பாடுவதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதுகிறார்களே தவிர, அவசர உணர்ச்சியுடன் ஆலோசித்து, உருப்படியான திட்டங்கள் தீட்டி, கணிசமான அளவுக்கு ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவதில் ஈடுபடவில்லை.

ஆசிரியர்களின் ஊதியம்தான் மிகமிகக் குறைவாக இருக்கிறதே தவிர அவர்கள் வாங்கித் தீரவேண்டிய வாழ்க்கைப் பண்டங்களின் விலைகளோ மிக மிக அதிகமாக இருக்கின்றன. அவை தாங்க முடியாத அளவுக்கு அதிகமாக இருப்பது மட்டுமல்ல, நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே செல்கின்றன. மிகக் குறைந்த ஊதியம் — மிக உயர்ந்த விலைவாசி — இந்த இரண்டுக்கும் இடையே நெடுந்தூரத்தை எப்படித்தான் குறைப்பது — என்னதான் செய்வது — எவ்வாறுதான்

வாழ்வது என்பதெல்லாம் புரியாமல் தத்தளித்தபடி இருக்கிறார்கள் ஆசிரியர்கள். இன்று நேற்றல்ல — கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாக இருந்து வருகிற விபரீத நிலைமை இது. விபரீத நிலைமை மட்டுமல்ல — விசித்திரமான காட்சிகூட. வேதனை நிரம்பிய காட்சி என்று இயம்பினாலும் பொருத்தமாகத்தான் இருக்கும்.

விலைவாசி உயர்வு காரணமாகக் கொந்தளித்து அலைமோதும் வாழ்க்கைக் கடலில், குறைந்த ஊதியம் எனும் செல்லரித்த துடுப்பைக் கொண்டு, தங்கள் குடும்பப் படகை ஓட்டிச் செல்ல முடியாமல் வேதனைப்பட்டு வருகிறார்கள் ஆசிரியர்கள் என்றாலும் அவர்கள் மிக மிகப் பொறுமையோடு இருந்து வந்திருக்கிறார்கள் இத்தனை ஆண்டுகளாக.

"அரசாங்கத்தாருக்கு நம் நிலைமை தெரியாதா—அவர்களாகவே உதவி செய்வார்கள்."

"இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு ஊதிய உயர்வை அளிப்பார்கள்."

"நாளைக்கு இல்லாவிட்டாலும் மற்றோர் நாளைக்கு, தேவையான வசதியைத் தேடித் தருவார்கள்."

"நாமாகக் கேட்டுப் பெறுவது நியாயமல்ல. அவர்களாக முன் வந்து தருகிறவரை பொறுத்திருப்பதே கண்ணியம்."

"கட்டுண்டோம் இந்தத் தொழிலில். பொறுத்திருப்போம். காலம் மாறும். நிலைமை திருந்தும்."

இப்படியெல்லாம்தான் தங்கள் உள்ளங்களுக்கு மட்டுமல்ல, தங்களுடைய மனைவி மக்களுக்கும் ஆறுதல் கூறியபடி, அமைதியாகவும் பொறுமையாகவும் இருந்துவந்திருக்கிறார்கள், ஆசிரியர்கள்.

அரசாங்கத்தின் கவனத்தை அவசரமான முறையில் தங்கள் பக்கம் இழுப்பதற்குரிய கிளர்ச்சிப் பாதைகள் பற்பல உண்டல்லவா. அவைகளில் ஏதொன்றையும் அவர்கள் எடுத்தும் பார்த்ததில்லை. ஊர்வலங்களா — நடத்தியதில்லை. ஆர்ப்பாட்டங்களா—புரிந்ததில்லை. வேலை நிறுத்தங்களா — நினைத்தும் பார்த்ததில்லை. கடையடைப்பா — சிந்தித்ததே கிடையாது. மறியல் முதலிய காந்திய முறைகளா — கனவிலும் கருதியதில்லை. எப்போதோ ஓர் முறை அத்தி பூத்தாற் போல, கார் இருளைக் கிழித்துக்கொண்டு மின்னல் ஒளி தோன்றியது போல, தப்பித் தவறி, தூது குழுவினராகச் சென்று, அமைச்சர்களைப் பேட்டி கண்டு தங்கள் குறைகளை மிக மெல்லிய குரலில் தெரிவித்தது தவிர வன்மை மிகுந்த கிளர்ச்சி முறைகள் எவற்றையுமே



அவர்கள் கையாண்டது கிடையாது. பொறுமையின் பிறப்பிடங்களாய், பண்பாட்டின் இருப்பிடங்களாய் கண்ணியம்—கடமை—கட்டுப்பாடு என்னும் ஒழுக்க நிலைகளின் நடமாடும் அடையாளங்களாய் இருந்து வந்தார்கள் அவர்கள்.

ஆமாம்—அப்படித்தான் இருந்தார்கள் அவர்கள் இதுவரையில் இப்போதுகூட அவர்களில் மிகப் பலர் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிலே ஒரு சாரார் அத்தகைய அமைதிப் பாதையிலே அவர்கள் இதுவரை வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்கிற மிகப் பெரிய உண்மையைத்தான் பீகார் மாநிலத்து நிகழ்ச்சி, அழுத்தந் திருத்தமாகவும் தெள்ளத்தெளிவாகவும் எடுத்துக் காட்டுகிறது. நுனிப் புல் மேய்வது போன்ற போக்கில் மேலெழுந்த வாரியாக மட்டும் பிரச்சினையைக் கவனிக்கிற பண்பு படைத்தவர்களுக்கு இந்த நிகழ்ச்சி மிக மிகச் சாதாரணமான ஒன்று என்றுகூட எண்ணத் தோன்றும். ஆனால் ஆசிரிய சமுதாயத்தின் முப்பதாண்டுக்கால வேதனையையும், வேறு பல துறையினர் எவ்வளவு சிறிய கோரிக்கைகளுக்காக எவ்வளவு எளிதில் கிளர்ச்சிப் பாதைகளில் புகுந்திருக்கிறார்கள் என்பதையும், ஆசிரியர்கள் எந்த அளவுக்குப் பொறுமையின் உருவங்களாக இருந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து பார்க்கும் எவரும், பீகார் நிகழ்ச்சியின் உட்பொருளை உணராமல் இருக்க முடியாது.

பொறுமையின் சின்னங்களாக தம் அமைதியின் வடிவங்களாகவும் இருந்து வந்த ஆசிரியர்களில் கூட ஒரு பிரிவினர் பொறுமையை இழக்கத் தொடங்கிவிட்டார்கள். பீகார் நிகழ்ச்சியிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய முதல் உண்மை இது.

ஆசிரியர்களின் நியாயமான குறைகளை அகற்றுவதில் அவசர உணர்ச்சியைக் காட்டாமல் ஏனோ தானோ என்று இருக்கும் போக்கிலேயே ஆட்சியாளர்கள் இனியும் இருப்பார்களானால், ஒரு சாரார் மட்டுமல்ல—ஏறத்தாழ எல்லா ஆசிரியர்களுமே, "அமைதிப் பாதையை விட்டு விலகிக் கிளர்ச்சிப் பாதையில் நுழைந்தால்தான் தங்களுக்கு நியாயம் கிடைக்கும்" என்கிற தீவிர உணர்ச்சியை பெற்றுவிடுவார்கள் என்பது உறுதியினும் உறுதியாகும். பீகார் நிகழ்ச்சி, இந்திய துணைக் கண்டத்துக்குத் தெரிவிக்கும் மற்றோர் உண்மை இது.

தொழிலாளர்களுக்கு இடையிலேயும், விவசாயிகளுக்கு நடுவிலேயும், அரசாங்கப் பணியாளர்கள் உள்ளத்திலேயும் காணப்படுகிற கிளர்ச்சி மனப்பான்மை ஆசிரிய சமுதாயத்திடமும், பரவ விடுவதால், மாணவர்களின் நன்மையும் கெடும். நாட்டின் முன்னேற்றமும்

தடைப்படும். கல்வியின் வளர்ச்சியும் பழுதடையும். ஆகவே ஆசிரியர்கள் அனுபவித்து வரும் துயரம் மிக்க வாழ்க்கையானது அவர்கள் அனைவரையும் கிளர்ச்சிப் பாதைக்குத் துரத்துவதற்கு முன்னால், அரசாங்கத்தாரே முன் வந்து, அவர்களின் ஊதியத்தை நியாயமான அளவுக்கு உயர்த்தி, அப்படி உயர்த்துவதன் மூலமாகக் கல்வியின் முன்னேற்றத்திற்கும், அந்த முன்னேற்றத்தின் வாயிலாக நாட்டின் நல்வாழ்வுக்கும் வழிகோலவேண்டும். இந்த மிக முக்கியமான பாடத்தைத்தான் பீகார் நிகழ்ச்சி முரசறைந்து தெரிவிக்கிறது.

“ஆசிரியர்கள் இப்படியெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்தல் ஆகாது. மாணவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுவதுதான் அவர்களுடைய வேலையே தவிர இத்தகைய கிளர்ச்சிகளில் ஈடுபடுவது அல்ல” என்று பீகார் மாநிலத்துக் கல்வி யமைச்சராக விளங்கும் திருவாளர் குமார கங்காநந்த சிங் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தாராம்.

உண்மைதான். ஆசிரியர்கள் கிளர்ச்சி முறைகளில் ஈடுபடுவது அவ்வளவாகப் பொருத்தமில்லைதான். அவர்களுடைய உயர்ந்த தொழிலின் சீரிய தன்மைக்கு அது ஏற்றது அல்லதான். இந்த உண்மையை மிக நன்றாக உணர்ந்த காரணத்தால்தான் ஆசிரியர்கள் இத்தனை ஆண்டுகளாகப் பொறுமையோடு இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் என்றென்றைக்கும் பொறுமையின் சின்னங்களாகவே இருந்துவிட்டால், அவர்களுடைய நிலை உயர்வதுதான் எப்போது? அவர்களுடைய வறுமையும் மிடிமையும் அழிவது என்றைக்கு? கேட்கமாட்டார்களா சில ஆசிரியர்களாவது இப்படி? என்ன விடை தருகிறார் பீகார் அமைச்சர் இக் கேள்விகளுக்கு?

ஆசிரியப் பெருமக்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடல் ஆகாது என்றால், அத்தகைய கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபடவேண்டிய அவசியமே தோன்றாதபடி அவர்களுடைய நிலையை உயர்த்த அரசாங்கத்தாரே முன் வந்திருக்கவேண்டும். ஆனால் அப்படி முன் வரவில்லையே அமைச்சர்கள்! அது ஏன்?

ஆசிரியர்களுடைய ஊதியமும், பிற வாழ்க்கை வசதிகளும், பிறபல துறையினர் பார்த்துப் பொறுமைப்படக்கூடிய அளவுக்கு அல்ல அவர்களெல்லாம் பார்த்துக் கேலி செய்ய முடியாத அளவுக்காவது உயர்த்தப்பட வேண்டாமா? ஆனால் அப்படி உயர்த்தப்படவில்லையே இதுவரை? முறைதானா இச் செயல்?



“ஆசிரியர்கள், கிளர்ச்சிகளில் இறங்குதல், ஆகாது—கூடாது—முறை அல்ல—தேவையில்லை” என்றெல்லாம் பேசுவது மிக எளிது. அத்தகைய சொற்பொழிவை எந்த நேரத்திலும் எவரும் ஆற்றிட முடியும். ஆனால் அத்தகைய கிளர்ச்சிகளே தேவையில்லாத அளவுக்கு ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்துவதற்கான திட்டம் தீட்டிப் பணியாற்றும் திறமை கிடைப்பதுதான் மிக அருமை.

அத்தகைய திறமை பீகார் மாநில அமைச்சர்களுக்கு உண்டோ இல்லையோ நாம் அறியோம். ஆனால் சென்னை மாநில அமைச்சர்களுக்கு அத்தகைய திறமை நிச்சயமாக உண்டு. ஆனால், எந்தக் காரணத்தாலோ அவர்கள், அந்தத் திறமையைப் பயன்படுத்தி ஆசிரியர்களின் நிலைமையைக் கண்ணியமான அளவுக்கு உயர்த்தாமல் இருக்கிறார்கள் இதுவரை.

தமிழ் நாட்டு அமைச்சர்கள் தங்களுடைய திறமையை இந்தத் துறையில் விரைவில் பயன்படுத்தவேண்டும் என்பதே நம்முடைய ஆவல்.

---

## மராட்டிய மண்டலத்து மாணிக்கம்!

இது என்னய்யா கூத்து இது—பெண்களை யல்லவா படிக்க வைக்கப் போகிறாராம் இவர்—ஆகுமா இந்தப் போக்கு—அடுக்குமா இந்தச் செயல்—அடுப்பூதும் பெண்களுக்குப், படிப்பதற்கு என்று நம் பாட்டிமார்கள்கூடச் சொல்வார்களே—இவருக்கு ஏனய்யா இந்த விபரீதப் புத்தி—பெண்களுக்காக என்றே பள்ளிக்கூடங்கள் பலவற்றை அல்லவா நடத்தப்போகிறாராம்—செச்சே தடுத்தே தீர வேண்டும் இந்தத் தகாத செயலை...என்றெல்லாம்தான் பலரும் பேசினர். மிகக் கடுமையான மொழிகளால் ஏசினர். எதிர்ப்புகள் அலை அலையாகக் கிளம்பின. இடையூறுகள் பலவற்றை அணி அணியாக உண்டாக்கினர் ஊரார். என்றாலும் ஒரு மனிதர், மிகத் துணிச்சலாக முன்வந்து, எதிர்ப்புகளையெல்லாம் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு, பெண்களுக்காக என்றே பல கல்வி நிலையங்களைத் தொடங்கி நடத்தினார். இப்போது அல்ல—இப்போதுதான் அது சர்வ சாதாரணச் செயலாகிவிட்டதே—கடைந்தெடுத்த வைதீகப் பெரியவர்கள் கூடத் தங்கள் பெண்களும் பேத்திகளும் கல்லூரிப் பட்டம் வரையில்

பெற்றாக வேண்டும் என்று துடிதுடிக்கிற காலம் இது—ஆனால் நாம் குறிப்பிடுவது சென்ற நூற்றாண்டின் இறுதிக் காலத்தை பெண் கல்வி என்கிற சொல்லமைப்பைக் கேட்டாலே ஆண்கள் சமுதாயம் மட்டுமல்ல. பெண்கள் கூட்டம் கூடக் கடுங்கோபம் கொண்டு ஆகாது—கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்த அந்தப் பழைய காலத்தை! அத்தகைய அறிவு இருள் நிரம்பியிருந்த காலத்திலேயே, அதனை விரட்டியடிக்கக் கல்வி ஒளியை பரப்பிய அண்ணல், டாக்டர் கார்வே அவர்கள் ஆவார்கள்.

இப்போது நடப்பது 1958-வது ஆண்டல்லவா! டாக்டர் கார்வே பிறந்தது 1858 வது ஆண்டில் வறுமையும் பிணியும் வாட்டி வதைக்கும் இவ்வுலகத்தில் ஒருவர் நூறு ஆண்டுகளும் உயிர் வாழ்வதே மிக அரிய செயலாகும். ஆனால் கார்வே அவர்களோ, நூறு ஆண்டுகளாகச் சிறந்த உடல் நலத்தோடு வாழ்ந்திருப்பதோடு, மக்களின் நல வாழ்வுக்காக அரும்பெரும் பணிகள் பலவற்றை ஆற்றியிருக்கிறார். பொதுவாகக் கல்வி ஒளியை எட்டுத் திசையிலும் பாய்ச்சுவதற்காகவும். சிறப்பாகப் பெண் கல்வியை வளர்ப்பதற்காகவும் அவர் ஆற்றியுள்ள அருஞ் செயல் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய ஒன்றாகும். ஏறத்தாழ நாற்பது பள்ளிகள் அவரால் தொடங்கி நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

அண்மைக் காலத்தில் மராட்டிய மண்டலம் பெற்றெடுத்துத் தந்திருக்கிற மாணிக்கங்களில் சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் மூவர். விடுதலைப் போராட்டத் தளபதி பால கங்காதர திலகர் ஒருவர். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார் மற்றொருவர். கல்விப் பணி புரிந்து வரும் கருத்துச் செல்வர் டாக்டர் கார்வே இன்னொருவர்.

கார்வே அவர்களின் நூறாவது பிறந்த நாள் விழா சில மாதங்களுக்கு முன்னால்தான் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

அரும்பணி பல புரிந்த அண்ணல் கார்வே இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து மக்கள் சமுதாயத்தை வாழ வைக்கவேண்டும் என்பது மராட்டிய மண்டலத்தின் ஆவல்—இந்திய மக்களின் விழைவு. வாழ்க கார்வே!

---

# கல்வித்துறையில் வெடிகுண்டு!

சர்க்கார் அல்லது ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பொதுப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்புவரை மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கக் கூடாதென்று சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இந்த உத்தரவு இதோடு முடிந்திருந்தால் வரவேற்புக்குரியதாயிருந்திருக்கும், ஆனால், தனிப்பட்டவர் நிர்வகிக்கும் பள்ளிகள்மீது ஒரு வெடிகுண்டு வீசவும் சர்க்கார் இந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் இனி மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்காதிருந்தால்தான் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு வழக்கம்போல் கிராண்டுடன் அங்கீகாரம் அளிக்கப்படும் என்று சர்க்கார் உத்தரவு கூறுகிறது. கிராண்டு கோராமல் மேற்கொண்டு மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கும் பள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தை அனுசரித்தாலேயே அவை அங்கீகாரம் பெறலாம் என்பது அவ்வுத்தரவின் இன்னொரு ஷரத்து.

இந்த உத்தரவால் தனிப்பட்ட நிர்வாகத்திற்குள்ளான பள்ளிகளின் நிலையோ, அல்லது பொதுவாக ஆரம்பக் கல்வியின் தரமோ என்னாகுமென்று சர்க்கார் முற்றிலும் யோசித்தனரா என்று தெரியவில்லை. அத்தகைய பள்ளிக்கூடங்கள் ஏராளமாக இருந்து வருகின்றன. கல்வியைப் பரப்புவதில் சர்க்கார் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பில் ஒரு பெரும் பகுதியை அப்பள்ளிக்கூட நிர்வாகிகள் ஏற்று வருவது தெளிவு. இப்போது அவர்கள் மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்குவதுடன், சர்க்காரிடமிருந்தும் கிராண்டு பெறுகின்றனர். அத்தகைய பள்ளிக்கூடங்களில் சர்க்கார் அல்லது ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு வழிகாட்டிகளாக விளங்குபவை பல. கிராண்டுடன், மாணவர்களிமிருந்து சம்பளமும் பெறுகையிலேயே கட்டுபடியாக வில்லையென்று புகார் செய்யும் தனிப்பட்ட நிர்வாகிகள் அநேகர். இனி அவர்கள் ஏதாவது ஒன்றை இழந்தாக வேண்டும். கிராண்டை இழந்து, அந்த நஷ்டத்தை ஈடு செய்ய மாணவர்களிடமிருந்து இரு மடங்கு, அல்லது மும்மடங்கு சம்பளம் வாங்குவதென்பது எல்லாப் பள்ளிகளாலும் சாத்தியமில்லை. அவற்றில் பெரும்பாலானவைக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்புவோர் நடுத்தர வருமானமுள்ளவர்களே. இலவசமாகக் கல்வி அளிக்கக்கூடிய பள்ளிகள் இருந்தும் அவர்கள் தம் குழந்தைகளை வேறு பள்ளிகளுக்கு அனுப்புவதற்குக் காரணம், அங்கு இன்னும் தரமான கல்வி அளிக்கப்படுவதுதான். ஆனால் அதற்காக அவர்கள் ஏற்கெனவே செலுத்தி வருவதற்கு அதிகமான சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையிலில்லை. தற்போதைய சர்க்கார் உத்தரவின்

பலனாக பெரிய பணக்காரர் குழந்தைகளுக்கென உள்ள தனிப்பட்ட பள்ளிக்கூடங்கள் மேற்கொண்டு நடக்கலாம். மற்ற தனிப்பட்ட பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகள் சர்க்கார் கிராண்டை மட்டும் பெற்று அவற்றை நடத்தச் சம்மதித்தாலன்றி, அவற்றை மூடிவிட வேண்டியதுதான். அத்தகைய பள்ளிக்கூடங்கள் சிலவற்றில் ஆசிரியர்களுக்கு மற்ற பள்ளி ஆசிரியர்களைவிட அதிகச் சம்பளம் கிடைத்து வருகிறது. இனி அதற்கு வழியில்லாமல் போய்விடும். இனி கல்வித் தரத்திலும் தனிப்பட்டோரின் பள்ளிகள் சென்னை கார்ப்பொரேஷன் போன்ற பொது ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளின் நிலைக்கு வந்துவிடலாம்.

தனிப்பட்ட நிர்வாகத்திலுள்ள பள்ளிகள் அனைத்துமே திறம்பட நடப்பதாக நாம் சொல்லவில்லை. அப் பள்ளிகளை சொந்த லாபத்திற்காக நிர்வகிப்பவர்களும் உண்டு. அத்தகைய பள்ளிகளுக்கு இனி இடமிருக்காது என்று குதூகலிப்பது அல்ப சந்தோஷம். புதிய நிலைமையில் மேற்கொண்டு தாங்கள் பள்ளிக்கூடங்கள் நடத்துவது சாத்தியமல்ல என்று பல தனிப்பட்ட நிர்வாகிகள் முடிவு செய்யும் நிலையில் அப் பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாக வேறு பள்ளிக்கூடங்கள் நடத்த சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருக்கின்றனர்? சர்க்காரின் மேற்குறித்த உத்தரவு அடுத்த வருஷத்திலிருந்தே அமுலாக விருக்கிறது. அதற்குள் எடுபடக்கூடிய தனிப்பட்ட பள்ளிகளின் ஸ்தானத்தில் மாற்றுப் பள்ளிகள் ஏற்படுத்துவது சர்க்காரால் சாத்தியமா? பள்ளி செல்லும் வயதினருக்கெல்லாம் ஆரம்பக் கல்வி அளிக்க தற்போதுள்ள பள்ளிகளே போதாதிருக்கும் நிலையில் இவற்றிலும் பல எடுபடக்கூடிய இந்த நடவடிக்கை பற்றி சர்க்கார் மறு பரிசீலனை செய்ய வேண்டுகிறோம்.

— "சுதேசமித்திரன்." (30-11-58 இதழின் தலையங்கம்.)

## ஆரம்பக்கல்வி வகுப்புகளுக்குக் கட்டணம் கூடாது

---

### அரசாங்கத்தின் உத்தரவு

பொது நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிகளில் 1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரைக்கும் கட்டணம் எதுவும் வசூலிக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. தனியார் நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிகள், பொது நிர்வாகப் பள்ளிகளுக்கான இந்த முறையை அனுசரிக்கலாம் அல்லது அனுசரிக்காமலுமிருக்கலாம். கட்டணம் வசூலிக்காத தனியார் பள்ளிகள் மட்டுமே அங்கீகாரம் பெறுவதற்கும் அத்துடன் வழக்கமான உதவித்தொகை பெறுவதற்கும் உரியவை. கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகள் வரையறுக்கப்பட்ட பாடதிட்ட முறையை அனுசரித்து நடந்தால் அவை அங்கீகாரம் பெறுவதற்கு உரியவை ஆகும்; ஆனால் உதவித் தொகையோ ஈடுமான்யமோ பெற உரியன ஆகமாட்டா. 1959-60-லிருந்து இந்த உத்தரவு அமுலுக்கு வரும். 'அப்போது தனியார் பள்ளிகள் 'கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகள்' என்றும், 'கட்டணம் வசூலிக்காத தனியார் பள்ளிகள்' என்றும் பாகுபடுத்தப் பட்டிருக்கும்.



நூல் நிலையம், வைத்தியப் பரிசோதனை, விளையாட்டு மற்றும் அதுபோன்ற தனிப்பட்ட வசதிகளுக்கான கட்டணங்களை எல்லாப் பள்ளிகளும் வசூலித்துக் கொள்ளலாம். உயர்நிலைப் பள்ளிகளில் ஆரம்ப நிலை வகுப்புகளுக்கு கட்டணம் சம்பந்தமான இந்த உத்தரவு பொருந்தாது. உயர்நிலைப் பள்ளிகளுக்கான உதவித் தொகை விதிகளை மாற்றும் விஷயமாக அட்ஹாக் கமிட்டி ஒன்று பரிசீலித்துக் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

5-வது வகுப்புவரை இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதில், அரசியலமைப்பின் 45-வது பிரிவில் கண்டுள்ள கொள்கையை சுருங்கிய வடிவில் அமுலாக்க அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்திருந்தது. அதையொட்டி மாநிலத்தின் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் 1965-66—க்குள்ளாக 5-வது வரை கட்டாயக் கல்வி அளிப்பது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. அரசியலமைப்புக் கொள்கையின் மற்றொரு அம்சமான இலவச கல்வி என்னும் விஷயம் பற்றியதே இந்த உத்தரவு. ஆரம்பக் கல்வி, கண்டிப்பாக இலவசமாகத்தான் தரப்பட்டாக வேண்டும் என்று அரசியலமைப்பின் 45-வது ஷரத்து வற்புறுவதாக மாநில அரசாங்கம் கருதவில்லை. எனவே, சம்பளம் வசூலிக்கின்ற தனிப் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க விரும்புகிறவர்களுக்கு அதற்கான வசதி இருக்கலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.

---

# மாணவர் மன்றம், சென்னை.

## ஆரம்பப்பள்ளி இறுதி (E. S. L. C.) வகுப்புத் தமிழ்த் தேர்வு 1959

பேரன்புடையீர்,

மாணவர் மன்றம் கல்வித் துறையில் ஆற்றும் தொண்டுகளில் ஆண்டுதோறும் நடத்தும் தமிழ்த் தேர்வுகள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கனவாகும். மன்றத்தினர் நடத்தும் இத் தமிழ்த் தேர்வுகள் அரசாங்கத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்கட்கு எல்லா வகையிலும் முன்மாதிரியாய் (Model) அமைந்து அவர்கள் அத்தேர்வில் சிறந்த முறையில் வெற்றி பெறப் பேருதவி பெரிதும் புரிந்துவருவதுடன் நல்ல ஊக்கமும் எழுச்சியும் ஊட்டி வருகின்றன என்பதனை அனைவரும் அறிவர். ஒவ்வோராண்டும் இத்தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தொகை நாங்கள் எதிர்பார்ப்பதற்கும் மேலாகவே இருப்பதால் மன்றத்தின் தொண்டு பெரும்பயன் அளித்து வருகின்றது என்று நாங்களும் பெருமகிழ்ச்சி கொண்டு மேலும் ஊக்கமுடன் பணியாற்றி வருகின்றோம். மன்றத் தேர்வுகளில் ஆண்டு தோறும் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டும் மன்றத்தின் தமிழ்த் தேர்வுகள் மிகச் சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடுகள் செய்துள்ளோம். தாங்கள் தங்கள் பள்ளி மாணவர்களை இத் தேர்வுகளில் மிகுதியாகக் கலந்து கொள்ளச் செய்வதன் மூலம் மன்றத்தின் தமிழ்த் தொண்டு மேலும் மேலும் சிறந்தோங்க உதவுமாறு வேண்டுகின்றோம்.

### பரிசுகள்

முதற் பரிசு ... ரூ. 60
இரண்டாம் பரிசு ... ரூ. 40
மூன்றாம் பரிசு ... ரூ. 20
நான்காம் பரிசு ... ரூ. 10 அல்லது தமிழ் நூல்கள்
ஐந்தாம் பரிசு ... ரூ. 5 பெறுமான தமிழ் நூல்கள் (10 பரிசுகள்)
ஆறாம் பரிசு ... ரூ. 3 பெறுமான தமிழ் நூல்கள் (16 பரிசுகள்) ஆக முப்பது பரிசுகள்

100-க்கு 60 மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுபவர்க்கு முதல்தர நன்மதிப்பிதழ்களும், 100-க்கு 50 மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுபவர்க்கு இரண்டாம்தர நன்மதிப்பிதழ்களும், 100-க்கு 40 மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுபவர்க்கு மூன்றாந்தர நன்மதிப்பிதழ்களும் அளிக்கப்பெறும்.



**பாடத் திட்டம் :**

அரசாங்கப் பொதுத் தேர்வுக்குரிய தமிழ்ப் பாடங்களே இத் தேர்வுக்கும் பாடங்களாகும்.

### தேர்வு விவரம்

**தேர்வு நாள் :** 14—2—'59 சனிக்கிழமை
காலை 2 மணி முதல் 4 மணி வரை

**கட்டணம் :**

இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ஒவ்வொருவரும் 11 அணா (69 புதுக்காசு) தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

குறிப்பு : தபால் கட்டணம் முதலியன உயர்ந்துள்ளமையால் தேர்வுக் கட்டணம் சிறிதளவு உயர்த்தப்பட்டது என்பதனை அறிவித்துக் கொள்கின்றோம்.

தேர்வுச் செலவுக்கென மன்றத்தார் குறித்த தொகையைக் கழித்துக்கொண்டு எஞ்சிய தொகையை அனுப்பி வைத்தல் வேண்டும். தங்கள் பள்ளியில் தேர்வு நடத்தாதவர் தேர்வுச் செலவு கழித்தல் கூடாது. அவர்கள் தேர்வு எழுதும் பள்ளிக்கு நாங்களே அனுப்பி வைப்போம்.

**தேர்வு நிகழும் இடம் :**

மாணவர்கள் இருபதின்மருக்குக் குறையாமல் இருந்தால் அவர்கள் பயிலும் பள்ளியையே தேர்வுக்குரிய இடமாக வைத்துக் கொள்ளலாம். இருபதின்மருக்குக் குறைவாகத் தேர்வெழுதும் மாணவர்கள் உள்ள பள்ளியினர் அண்மையில் உள்ள பள்ளியினருடன் ஏற்பாடு செய்துகொண்டு அவர்கள் அனுமதியுடன் எங்கட்கு விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பமும் கட்டணமும் செலுத்தவேண்டிய இறுதிநாள் 19-12-'58, 20-12-'58 முதல் 5-1-'59 வரை கட்டணம் அனுப்புவோர் 12 புதுக் காசுகள் அபராதத்துடன் செலுத்தலாம்.

**விண்ணப்பத்தாள் வரைந்தனுப்பும் முறை :**

1. மாணவர் பெயரும் முகவரியும் (தனித்தனி எழுத்துக்களில் விளக்கமாக) 2. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயரும், முகவரியும், தொழிலும். 3. மாணவர் வயது. 4. படிக்கும் பள்ளியின் பெயரும் வகுப்பின் பிரிவும். 5. தேர்வு எழுத விரும்பும் இடம். (தமிழிலேயே விளக்கமாக எழுதி அனுப்ப வேண்டும்). தலைமை ஆசிரியர் அல்லது தமிழாசிரியர் கையொப்பம் இன்றியமையாதது. பள்ளியில் பயிலாது அரசாங்கத் தேர்வுக்குச் செல்லும் மாணவ மாணவியர் தமிழ்ப் புலவர் ஒருவர் உறுதி மொழியுடன் விண்ணப்

பத்தை அனுப்புவதோடு தேர்வு எழுத விரும்பும் இடத்தையும் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

முக்கியமான குறிப்பு :

கட்டணத் தொகையைப் போஸ்டல் ஆர்டராக அனுப்பினல் கிராஸ் செய்து அனுப்புதல் கூடாது. செக்காக அனுப்பினல் கிராஸ் செய்து அனுப்புதல் நலம்.

எந்தக் காரணத்துக்காகவும், தேர்வுக் கட்டணத்தைத் திருப்பியனுப்புதலோ, வேறு ஒருவர்க்கு மாற்றிக் கொள்ளுதலோ செய்ய முடியாது எனபதனை அறிவித்துக் கொள்கின்றோம்.

விண்ணப்பமும் கட்டணமும் அனுப்பவேண்டிய முகவரி :

பொருளாளர், மாணவர் மன்றம்,

17, இரத்தின முதலி தெரு, கொண்டித்தோப்பு, சென்னை—1.

மாணவர்களுக்குத் தமிழில் ஊக்கமளிப்பதும் அரசாங்கத் தேர்வுக்குப் பயிற்சி யளிப்பதுமே இத்தேர்வுகளின் நோக்கமாதலால் தமிழில் குறைந்த மதிப்பெண்கள் பெறுகின்ற மாணவர்களையும் தேர்வில் பெரிதும் கலந்துகொள்ளச் செய்ய வேண்டுகின்றோம்.

குறிப்பு :

1. தேர்வுக்கு வருவோர் காகிதம், எழுதுகோல் முதலியன தாமே கொண்டு வருதல் வேண்டும்.

2. தேர்வு முடிவுகள் அரசாங்கத் தேர்வுத் துவக்கத்திற்கு முன்பே அறிவிக்கப் பெறும்.

3. நன்மதிப்பிதழ்களும், பரிசுகளும் கோடை விடுமுறை கழித்துப் பள்ளி திறந்தவுடன் அளிக்கப்பெறும்.

4. மேற்கூறிய விவரங்களில் ஏதேனும் ஐயம் உண்டானல் மேலே குறிப்பிட்ட முகவரிக்குப் போதுமான தபால் தலையுடன் எழுத வேண்டுகிறோம். தபால்தலை வைத்து அனுப்பாதவர்கட்குப் பதில் விடுக்க இயலாது. இத்தேர்வு சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்கள் யாவும் தமிழிலேயே நடைபெறும்.

இங்ஙனம் :

புலவர் மயிலை. சிவமுத்து, *தலைவர்*

எஸ். சேஷாசலம்,
C. மாணிக்கவாசகன், *அமைச்சர்கள்.*

புலவர் கோ. வில்வபதி, *தேர்வுக் குழுத் தலைவர்.*

மா. இளஞ்செழியன், M. A. *தேர்வுக் குழு அமைச்சர்.*

T. சிவஞானம், *பொருளாளர்.*



## செங்கற்பட்டு ஜில்லா மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் கமிட்டி கூட்டம்

---

செங்கற்பட்டு ஜில்லா மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் கமிட்டி கூட்டம் திரு. S. K. கோவிந்தராஜ நாயகர் அவர்கள் தலைமையில் 7-12-58ல் கூடி தமிழ்நாடு பேரவையைப் பலப்படுத்தவும், ஜில்லாவில் உள்ள ஒவ்வொரு சென்டரைப்பற்றி நன்கு அறிந்து, ஜில்லா யூனியன் திறம்பட வேலை செய்ய ஒவ்வொரு சென்டர் பிரதிநிதிகள் கொண்ட காரியக் கமிட்டியை அடுத்த மாதம் மகாபலிபுரத்தில் கூட்டவும், அதற்கு மாவட்ட தண்டல் நாயகரையும் கழக கல்வி அதிகாரி அவர்களையும் அழைப்பதென்றும், காரியக் கமிட்டி உறுப்பினர்களின் பிரயாணச் செலவை மட்டும் அந்தந்த சென்டர் தரவும், உணவு முதலிய வசதிகளை யூனியன் தலைவர் திரு. S. K. கோவிந்தராஜ நாயகர் அவர்கள் அன்புகூர்ந்து அளிக்க முன் வந்தமைக்கு நன்றி தெரிவித்ததோடு, யூனியன் செயலாளர் திரு. C. பாலசுப்பிரமணியம் 23-11-58-ல் விழுப்புரத்தில் நடந்த தமிழ் நாடு பேரவையின் நடவடிக்கைகளை விளக்கிப் பேசி 25-1-58-ல் சைதாப்பேட்டை மாநாட்டின் தீர்மானங்களுக்கு ஜில்லா போர்டார் கொடுத்த பதில்கள் மிகவும் ஏமாற்றத்தை அளிப்பதாக இருப்பதாக தெரிவித்ததின்பேரில் அப் பதில்களை காரியக்கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டு, மீண்டும் ஜில்லா போர்டாருக்கு அனுப்ப வேண்டுமென்றும் மாநாட்டின் வரவு செலவு கணக்கையும் காரியக் கமிட்டிக்கே சமர்பித்துவிடலாமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

குன்றத்தூர், 12-12-'58.

சி. பாலசுப்பிரமணியம், *செயலாளர்.*

# The Madras Aided Elementary School Managers' Association

At an urgent meeting of the Association held on Wednesday the 17th instant at 5-30 p. m. at the premises of G. Rajamannar Chetty Elementary School, Mannady, the following resolutions were unanimously passed with Mr. A. K. SARMA presiding :—

Resolved that this Association of Managers of Aided Elementary Schools while welcoming the policy of the Government in making Elementary Education free in the state as contemplated in G. O. No. P. S. Ms. 2124 dated 29-11-58 assures the Government of the cooperation of the managements in this aspect.

Resolved further that the Association apprehends that unless the managements are allowed to collect fees or the Government is prepared to meet the extra expenditure incurred towards the payment of extra salaries over and above the present scale of Teaching Grant, T. P. F. contribution, rent, stationery, pay to menial staff and other contingencies which are now met from the school fees collections alone for the running of the schools it will be quite impracticable for the managements to run the schools as non-fee levying schools from 1-6-59 with the aid of "usual grants-in-aid in force" now proposed.

This Association views with grave concern that unless the Government reconsiders its decision and revises the present G. O. permitting the managements to levy fees as usual in addition to the "usual grants-in-aid in force"-there will be no other alternative to them than to close down the schools from 1-6-59 after giving due notice to the parents and teachers on or before 31-1-1959.

This Association resolves that a conference of managers of all Aided Schools in the city be convened during the first week of January 1959.

(Sd) J. MUTHUKRISHNAN,
*Secretary.*

# கக்குவான் இருமல்

(ஏ. டி. மாக்ஆல்பைன், எம்.டி.)

இருபது வருஷங்களுக்கு முன் இன்றைக்கு இருப்பதை விட அதிகமான தொத்து நோய்கள் உலகத்தில் உலாவி வந்தன. எனினும் நாம் ஜாக்கிரதையாக இல்லாவிடில், புது வகைக் கொள்ளை நோய்கள் நம் புவியினுள் புகலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

கக்குவானைப் பற்றிச் சற்று கவனிப்போம். இது சுவாசக் குழலைப் பாதிக்கும் ஒரு தொத்து நோய். விரைவில் பரவக் கூடியது. பதினான்காம் நூற்றாண்டு வரை இவ் வியாதியைப் பற்றி யாரும் அதிகமாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

1578-ம் வருஷத்தில் பெய்லோ என்ற பிரெஞ்சுக்காரர் இவ்வியாதியால் வெளியேற்றப்படும் சளி, இரத்தம், வாந்தி முதலியவைகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார். பதினேழாம் நூற்றாண்டில் இவ் வியாதி இங்கிலாந்து தேசத்தில் எங்கும் பரவலாகக் காணப்பட்டது. கடைசியாக 1906-ம் வருஷத்தில் போர்டெட், கெங்கோ என்ற இரு பிரெஞ்சுக்காரர் கக்குவானின் மூல காரணத்தைக் கண்டுபிடித்தார்கள். மூல காரணம் எது என்று தெரியுமா? பாசில்லஸ் வகையைச் சேர்ந்த தடிரூபமான, மிக நுண்ணிய கிருமிகள்தான். சக்தி வாய்ந்த சூக்ஷ்மதரிசினியின் மூலமாகத் தான் இதைக் காண முடியும். கண்டு பிடித்தவர்களைக் கனம் பண்ணும்படியாக, இக் கிருமிக்குப் போர்டெட் கெங்கோ பாசில்லஸ் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இக் கிருமிகள் மூக்கில் வடியும் சளியிலும், தொண்டையிலும் சுவாசப் பாதையிலும் காணப்படுகின்றன. இக் கிருமியைத் தனித்தெடுத்து, ஆராய்ச்சி சாலையில் வளர்த்து, அதன் மூலம் இவ் வியாதியின் அறிகுறிகளை ஆராய்ந்தார்கள்.

கக்குவான் என்னும் இவ் வியாதி நாட்டு எல்லைகளை மதிப்பதில்லை. நாடு விட்டு நாடு தாவுகிறது. எனவே உலகெங்கும் காணப்படுகிறது. பெரிய பட்டணங்களில் இதன் அகோரம் அதிகம். அங்கே தான் இக் கொள்ளை நோய் விசுவரூபம் எடுக்கும். டென்மார்க் தேசத்தில் நாலு அல்லது ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம் இந் நோய் தவறாமல் ஆஜராகி வருகிறது. இடைக் காலத்தில் இது இருக்கிற இடம் தெரியாது. குளிர் தேசங்களில் தான் இதன் அகோரம் அதிகம். பையன்கள் அல்லது ஆண்களைக் காட்டிலும் பெண்பிள்ளைகளையும் ஸ்திரீகளையுமே இந் நோய் அதிக

மாகப் பாதிக்கிறது, இவ் விஷயத்தில் இது மற்ற தொத்து நோய்களைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கிறது அல்லவா?

கக்குவானில் ஒரு விசேஷம் உண்டு. அதாவது தாய் சிறுமியாய் இருந்தபோது, கக்குவான் வந்திருந்தால், அவளுடைய குழந்தைக்குக் கக்குவான் சாதாரணமாக வராது. ஆனால் இந்தச் சலுகை, சிசு வளர வளரக் குறைந்துகொண்டே போகிறது. ஆறு மாதம் அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய குழந்தைகளைத்தான் கக்குவான் அதிகமாகத் துன்புறுத்துகிறது. இச்சிசுகளுக்குக் கக்குவான் வந்தால் மிகவும் ஆபத்து.

கக்குவான் நோய்ப்பட்ட ஒரு குழந்தை இருமும்போது அல்லது தும்மும்போது, காற்றின் மூலமாகக் கிருமிகள் பரவி, இன்னொரு குழந்தையை அடைகின்றன. எவ்வளவு காலத்திற்கு இந்நோய் தொத்தும் தன்மை உடையதாயிருக்கிறது என்று நிச்சயமாய் யாருக்கும் தெரியாது. ஆனால் நோயாளி சளிப் பிடித்துக் கஷ்டப்படும் காலம் தொடங்கி கக்குதல் ஏற்படும் இரண்டு வாரங்கள் வரைக்கும் என்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கக்குவானுள்ள ஒரு குழந்தையும் சுகதேகியான ஒரு குழந்தையும் சிறிது நேரம் ஒரு அறையில் ஒன்றாய் இருந்தால் போதும். இந்நோய் சுகதேகியான குழந்தையைத் தாவிப் பிடிக்கும்!

நோயுள்ள குழந்தை மற்றவர்களை முத்தம் செய்வது தவறு. நேரடியாக மாத்திரம் அல்ல, மறைமுகமாகவும் இந்த நோய் பரவக்கூடும். கக்குவான் உள்ள குழந்தை உபயோகித்த ஒரு பாத்திரத்தை அல்லது கரண்டியை அல்லது கைத்துண்டை இன்னொரு பிள்ளை உபயோகிக்குமானால், அதற்கு நிச்சயமாகவே கக்குவான் தொத்திக்கொள்ளும். காய்ந்து போன சளியில் இக் கிருமிகள் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு உயிரோடிருக்க முடியும். எனவே காற்றின் வழியாய் இவை இடம் மாறும்போது, கக்குவான் வியாதியும் பிரயாணம் செய்ய ஆரம்பித்து விடுகிறது. குழந்தைகளுக்கு இன்ன வயதில்தான் இந்த வியாதி வரும் என்று சொல்வதற்கில்லை. பிறந்த ஒரு வாரத்திலேயே இவ் வியாதி ஒரு சிசுவைப் பாதிக்கலாம். நான்கு வயதுக் குழந்தைக்குத்தான் இவ் வியாதி அதிகமாய் வருகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு வயதுக்குட்பட்ட அநேக குழந்தைகள் கக்குவான் இருமலால் இறந்துவிடுகிறார்கள். ஆனால், இதற்குக் காரணம் வெறும் கக்குவான் மாத்திரம் அல்ல. அத்துடன் சேர்ந்து வரும் நிமோனியா, அல்லது வயிற்றுப் போக்காக இருக்கலாம். எனவே எவ்வளவுக்கு விரைவில் குழந்தைகளுக்கு கக்குவான் தடுப்பு ஊசி குத்த முடியுமோ அவ்வளவுக்கு நலம்.



இவ் வியாதியின் போக்கில் மூன்று படிகளைக் காணலாம். முதலாவது சளி, இரண்டாவது இழுப்பு, மூன்றாவது குணமடைந்துவரும் பருவம். கக்குவான் ஆரம்பத்தில் ஜலதோஷம் மாதிரிதான் இருக்கும். ஒரு வாரம் அல்லது அதற்குச் சற்று அதிகமாகவே இது நீடித்திருக்கும். இக் காலத்தில்தான் கக்குவான் வெகு இலகுவாய் மற்றவர்களுக்குப் பரவும் தன்மையுடையது.

வியாதியின் அடுத்த படலம் ஒன்று முதல் ஆறு வாரங்களுக்கு நீடித்திருக்கலாம். இப்போது தான் இழுப்பு மிகவும் நன்றாகத் தெரியும். முதலில் இரவில் தோன்றி, படிப்படியாக அதன் எண்ணிக்கையும் அகோரமும் அதிகரித்துக்கொண்டே வரும். புப்புசத்தில் உள்ள காற்று முழுவதும் திடீரென்று வெளியேற்றப்படுவதால், மறுபடியும் காற்று உள்ளே இழுக்கப்படும்போது, பாதி அடைத்துள்ள குரல்வளையின் வழியாய் காற்று வரும்போது இழுப்பு உண்டாகிறது. முகம் சிவந்து போகிறது. உமிழ்நீர் குறைகிறது. மூக்கிலிருந்து இரத்தம் வடிந்தாலும் வடியலாம். கண் இமைகளும் உதடுகளும் வீங்கினால் போல் காட்சி அளிக்கின்றன. வாந்தியும் வரும். கடைசியாக வியாதியின் அகோரம் தணிய, இவையும் தணியும்.

கக்குவான் எப்பொழுதுமே அபாயம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் குழந்தையின் வயது மிகவும் கொஞ்சமாக இருந்தால், ஆபத்து அதிகம் என்றுதான் அர்த்தம். சுகாதாரமற்ற சூழ்நிலையாக இருக்குமானால், வியாதியின் சிக்கல்கள் அதிகப்படலாம். சாதாரணமாக மூன்று வயதுக்குட்பட்டவர்களுக்கு நிமோனியா வருவது சகஜம். இரண்டு வயதுக்குட்பட்டவர்களுக்கு நரம்பு மண்டல சம்பந்தப்பட்ட கோளாறாகிய வலிப்பு வரலாம். சிலருக்கு இடைக் காலத்தில் வலி உண்டாகலாம்.

குழந்தை பிறந்து சில மாதங்களுக்குள்ளாகவே கக்குவான் தடுப்பு ஊசி குத்திக்கொள்ளுவது அவசியம். இதற்காக மூன்று மருந்துகளை — டிப்தீரியா, கக்குவான், டெட்டனஸ் முதலியவைகளைத் தடுப்பதற்கானவையைச் சேர்த்தே உடம்பில் புகுத்துகிறார்கள். இப்படி மூன்று அல்லது நான்கு தடவைகள் குத்திக்கொள்ள வேண்டும். ஒரு தடவை குத்துவதற்கும் அடுத்த தடவை குத்துவதற்கும் குறைந்த பட்சம் ஒரு மாத காலமாவது இருக்க வேண்டும்.

பள்ளிக்கூடத்திலாவது அல்லது சிசு சம்ரக்ஷணை சாலையிலாவது, குழந்தைகள் அதிகமாகக் "கொக் கொக்" என்று இருமினால், அதை உடனே கக்குவானாகப் பாவித்து, குழந்தையை வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும். ஏனென்றால் இன்னும் கொஞ்சக் காலம் சென்றால்தான், அது கக்குவானா இல்லையா என்று

திட்டமாகச் சொல்ல முடியும். எனினும் அதற்குள்ளாகவே காற்றின் மூலமாகக் கிருமிகள் சென்று மற்றக் குழந்தைகளையும் தாக்கிவிடும், அல்லவா? எனவே முன்னெச்சரிக்கையாக இப்படிப் பட்ட இருமலை கக்குவானுகவே பாவிப்பது நலம்.

தடுப்பு ஊசி குத்தின இடத்தில் கொஞ்சம் தடிப்பு காணப்படும். இது ஒரு மாத காலம் அல்லது அதற்கு அதிகமாக நீடித்திருக்கலாம். மருந்தை உடல் உட்கிரகித்து எதிர்ப்பை உண்டு பண்ண நாட்கள் பிடிக்கின்றன என்பதைக் காட்டும் அறிகுறியாகும் இது. கக்குவான் நோய்ப் பட்ட வெகு இளம் சிசுக்களுக்கும் மிகவும் மெலிந்த குழந்தைகளுக்கும் மனித இரத்தத்திலிருந்து தயாரிக்கப்படும் "பெர்டு சிஸ்சீரம்" என்ற மருந்தைக் கொடுத்தல் நலம்.

நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் படுக்கையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். சுத்தக் காற்றும் சூரிய வெளிச்சமும் இன்றியமையாதவை. பால், காய் கறிகள், முட்டை, கனிகள், தானியங்கள்—இவை மிகவும் அவசியமான உணவு. அடிக்கடி கொஞ்சம் கொஞ்சம் உணவு கொடுப்பது தான் நலம். வயிறு புடைக்க உண்டு, மணிக்கணக்காய்க் காத்திருக்க வேண்டியதில்லை.

— "நல்வழி"

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

*

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்

*

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் அனுப்ப 25 பாரங்களுக்கு தபால் செலவு 14 n. p. 50 பாரங்களுக்கு 26 n. p 75 பாரங்களுக்கு 41 n. p. 100 பாரங்களுக்கு 50 n. p.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# அருஞ்செயல் ஆற்றிய அறிஞர் பெருந்தகை

[இரா. மாணிக்கம்]

அவர்!............ஓர் ஆசிரியர். ஆம் அவர் ஓர் பள்ளியாசிரியர் தான். பிற்பகல் பள்ளி முடிந்தது. கதவுகளைப் பூட்டினார். தன் இல்லம் நோக்கி ஏகினார். பள்ளிப் பிள்ளைகளின் நல்வாழ்வைப்பற்றி எண்ணியவாறே நடந்தார். கந்தலாடையும் கலைந்த முடியும் கொண்டவனுய்த் தெருவின் ஓரத்தில், ஓர் மூலையில் ஆழ்ந்து தூங்கும் ஓர் சிறுவன் அவரின் சிந்தனையைத் தன்பக்கம் இழுத்தான். அவரும் அவன் அருகில் சென்றார்.

தம்பி...எழுந்திரு. ஏன் இங்கு தூங்குகின்றாய்? உன் அன்னையிடம் செல்வதுதானே!

ஐயா! எனக்கு அன்னை இல்லையே!

தந்தை!

அவரும் இல்லை.

உன் வீட்டிற்காவது செல்லக் கூடாதா?

அதுவும் எனக்கில்லையே!

உன் நண்பர்கள் வீட்டிற்காவது செல்லலாமே!

நண்பர்கள்கூட எனக்கு இல்லை ஐயா......

தாயுமில்லை! தந்தையுமில்லை! நண்பர்களும் இல்லை! இருக்க இல்லமும் இல்லை! ஒருவேளை இவன் பொய்யுரைக்கின்றானோ? இவ்வாறு எண்ணிய ஆசிரியர் தன் அனுபவத்தில் இத்தகைய சிறுவனைச் சந்தித்ததேயில்லை என அவருக்குள் கூறிக்கொண்டார்.

அச்சிறுவன் கூறியது அத்தனையும் உண்மையென்பதனை ஆசிரியர் சிறிது நேரத்தில் அறிந்து கொண்டார். ஆசிரியரின் உள்ளம் எல்லையில்லாத் துன்பமடைந்தது. அவன் பெயர் 'ஜிம்ஜார்விஸ்.' இலண்டன் மாநகரத்தின் தெருக்களில் இரந்தும், திருடியும், மூட்டை தூக்கியும் தன் துன்ப வாழ்வினைக் கழித்து வந்தான். குப்பைத் தொட்டிகளும், தெருவின் ஓரங்களில் நிற்கும் சீரழிந்த வண்டிகளுமே அவனது உறைவிடம். படிப்போ, பாதுகாவலோ இல்லாத அவன் ஒளிவிடும் கண்களுடனும், சுறுசுறுப்புடனும இருந்தான். பத்து வயதினையடைந்த அவன் தொல்லை பல கண்டுவிட்டவன். அரசாங்கக் காவலரின் கண்களில் மண்ணினைத் தூவித் தன் காலத்தினைக் கழித்து வந்தான்.

ஆசிரியர் அச்சிறுவன் அவல நிலையினைக்கேட்டு, "ஓ! என் நாடே! இச்சிறுவனைப் போன்று இன்னும் எத்தனை சிறுவர்களைத்

தன்னில் அடக்கி வைத்திருக்கின்றாயோ?" என்று கேட்டார். 'ஜிம்'மின் உதவியால் அவனைப் போன்று அல்லலுறும் சிறார்களைக் கண்டு பிடித்தார். ஏன்? சல்லடை போட்டாற்போல் சலித்து எடுத்தார்.

அன்றே அவரது உள்ளம் அனாதைப் பிள்ளைகளின் அவல வாழ்வினைப் போக்கும் அரிய பணியினைத் துவக்கும்படி தூண்டியது. துவக்கினார் தன் பணியினை. ஆயிரமாயிரம் சிறுவர்களின் கண்ணீர்த் துளிகளைப் போக்கினார். கவலையை நீக்கினார். அவர் பெயரால் ஆங்கில நாடு பூராவும் அனாதை இல்லங்கள் பல தோன்றின. சிறுவர்களின் வாழ்வினைச் செம்மைப்படுத்திய அச்செம்மல் அந்நாட்டுக்கு நல்ல பல மருத்துவர்களையும், வழக்கறிஞர்களையும், பேராசிரியர்களையும், புலவர் பெருமக்களையும், கலைஞர்களையும், ஆளும் அமைச்சர்களையும் ஆக்கித் தந்து உதவினார்.

அத்தகைய தூய உள்ளங்கொண்ட ஆசிரியரின் பெயர் Dr. தாமஸ் ஜான் பர்னார்டோ. 1845-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாள் அயர்லாந்து நாட்டினைச் சேர்ந்த டப்ளினில் பிறந்தார். இளமையிலேயே ஆழ்ந்த அறிவும், மற்றோர்க்குப் பணிபுரியும் ஆர்வமும் கொண்டவராயிருந்தார். பள்ளிப் படிப்பிலே நாட்டமில்லாத அவர் தனியாகப் பயனுள்ள நூல்கள் பலவற்றைத் தெளிவுறக் கற்றார். ஏதேனும் தொழில் செய்ய எண்ணிய அவர் அதனையும் விட்டார். மக்கட்குத் தொண்டு புரிய எண்ணினார்.

அன்றோர் நாள் சீனா சென்று மதத்தொண்டு செய்ய மதகுருவிடமிருந்து அழைப்பு வந்தது. அழைப்பினை ஏற்று இலண்டனுக்கு விரைந்தார். மதக்கல்வி தவிர்த்த நேரங்களில் அனாதைப் பிள்ளைகளின் பள்ளியில் ஆசிரியப் பணி புரிந்தார். தன் முயற்சியால் தானே ஓர் அனாதைப் பள்ளி ஆரம்பித்தார். சீனா சென்று தொண்டாற்றுவதைவிட "நாட்டு மக்கட்கு ஆற்றும் தொண்டே சிறந்த தொண்டு" என்பதனை நன்குணர்ந்தார். ஓர் நாள் மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிட்டியது. வாய்ப்பினை நழுவ விடாது, "வளமில்லா, வறண்ட சிறுவர்களின் வாழ்க்கையைச் சீர்திருத்துவதே உண்மையான மதத் தொண்டெனக் கூறி" ஆங்கு குழுமியிருந்த மக்களைத் தன்வயப் படுத்தினார். மக்கள் திரளோ பர்னார்டோ சொல்லுவது அத்தனையும் உண்மை உண்மை என ஒலி முழக்கினர்.

கூட்டம் முடிந்து அவர் வீடு திரும்பினார். மதக்குருக்களின் பணிக்காக மற்றோர் குடும்பங்களில் பணியாற்றி வந்த ஓர் வேலைக்காரி பர்னார்டோவின் கையில் பணமுடிச்சு ஒன்றினைக் கொடுத்துப் பறந்தோடிவிட்டாள். அம்முடிச்சில் இருபத்தேழு பார்த்திங்குகள் இருந்தன.



அதுவே அவரது புனிதப் பணிக்கு அளிக்கப்பட்ட முதல் காணிக்கை.

நாட்கள் பல நகர்ந்தன. சூதுமதியினர் சூழ்ச்சி வலை வீசினர். "அனாதைப் பிள்ளைகள் இன்னும் நம் நாட்டில் ஏராளம் பேர் உள்ளனர் என்று பர்னார்டோ கூறுவது அத்தனையும் பொய்" எனக் கதைக் கட்டினர். நல்ல பணிக்கு எங்கும் எதிர்ப்பு இருப்பது இயல்புதானே! அதுபோழ்து சுரங்கங்களிலும், தொழிலகங்களிலும் பெருநகரங்களிலும் பணியாற்றிய எத்தனையோ ஏழைச் சிறுவர்களின் வாழ்க்கையை வளம் கொழிக்க வைத்த ஷாப்ட்ஸ்பரி பிரபு என்பார், டாக்டரைக் கூப்பிட்டு அம்மாதிரி அனாதைக் குழந்தைகளை எனக்குக் காட்ட முடியுமா? எனச் சற்றுக் காட்டத்துடன் கேட்க— அதற்கென்ன இப்போதே தயார்! புறப்படுவோம் வாரீர்! போவோம்! என அனாதைக் குழந்தைகளின் இருப்பிடத்துக்கு இட்டுச் சென்று அல்லலுறும் வருங்கால இளைஞர்களின் எழிலற்ற வாழ்க்கையினைக் காட்டினார். ஷாப்ட்ஸ்பரி பெரிதும் வருந்தி பர்னார்டோவின் பணிக்குத் தன்னாலான உதவியனைத்தும் அளிப்பதாகக் கூறி டாக்டரை மேலும் உற்சாகப்படுத்தினார்.

ஆரம்பத்தில் பயனற்ற கழுதை கொட்டகையில் ஆரம்பித்த அனாதை இல்லமானது பின் இரண்டு குடிசைகளில் குடியேறிற்று. இடம் போதாத காரணத்தால் இன்னுமோர் கட்டிடத்தை வாடகைக்கு வாங்கினார். அனாதைகளின் நல்வாழ்வுப் பணிக்காக அவர் யாரிடமும் கடன் பெறவில்லை. நல்ல உள்ளம் படைத்தோர் கொடுத்த நன்கொடையைக் கொண்டே திறம்பட நடத்தினார் தாம் மேற்கொண்ட பணியினை. யாரையும் சோம்பேறியாய் விடாது அனைவருக்கும் விருப்பமான கல்வியும், தொழிலும் கற்பிக்கப்பட்டன. இல்லத்துக்கு உதவுவோரைவிட, உதவி நாடி வந்தோரே ஏராளம். இதற்கிடையில் சிறுவர்களின் உடல் நலத்தைப் பேண மருத்துவத் துறையிலே தேர்வு எழுதி 'டாக்டர்' பட்டமும் பெற்றார்.

ஓர் நாள் 'காரட்ஸ்' என்னும் சிறுவன் அனாதை இல்லத்தில் சேர விரும்பினான். இட நெருக்கடியால் இன்னும் ஒருவாரம் கழித்து வரும்படி டாக்டர் அவனிடம் கூறி அவனது ஒருவாரச் செலவுக்குச் சிறிது பணமும், ரொட்டியும் கொடுத்தனுப்பினார். ஆனால், அந்தோ! அச்சிறுவன் ஒரு வாரத்துக்குப் பின் குளிராலும், நோயாலும் தொல்லைபட்டு இறந்துபோன செய்தியைக் கேள்விப்பட்ட டாக்டர் ஆழ்ந்த கவலையுற்று, அன்றே அவரது அனாதை இல்லத்தின் முன் "உதவி நாடி வரும் எந்த அனாதைக்கும் எச்சமயத்திலும் இனி உதவி மறுக்கப்படமாட்டாது" எனக் கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்தார் என்றால்,

என்னே அவரது தொண்டு. சிறுவர்களின் அவல நிலையைப் போக்கியடாக்டர் சிறுமிகளின் வாழ்க்கையையும் செம்மைப் படுத்தினர்.

டாக்டரின் சீரிய தொண்டுகள் அவருக்குப் பல எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது. சிலர் "அனாதைகளுக்காகக் கொடுக்கப்படும் நன்கொடைகளைத் தனக்காக வைத்துக் கொள்ளுகின்றார்" எனக் கதை கட்டினர். சிலரோ "அனாதைப் பிள்ளைகட்கு அரை வயிற்றுக் கஞ்சியே கொடுக்கப்படுகிறது" என்றனர். இன்னும் சிலரோ "பொது விசாரணை" தேவை என்றனர். பொது விசாரணையும் நடந்தது. கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டன. கணக்குகள் யாவும் சரியெனத் தணிக்கையாளர் தீர்ப்புக் கூறினர். நீதிவென்றது! நேர்மை நிலைத்தது! தொண்டு துரிதமாக முன்னேறத் தீர்ப்பு வழிகோலியது. வன் சொல்லாளரின் வாய்கள் பூட்டப்பட்டன.

இருப்பினும் தொல்லை கொடுப்பதே தொழிலாகக் கொண்டோர் பர்னர்டோ குழந்தைகளைத் திருடுகிறார் எனக் குற்றஞ் சாட்டி கொடுமை பல கொடுத்தனர். நீதி மன்றம் ஏற்றினர். எனினும் வெற்றி டாக்டருக்கே. இதனையெல்லாம் ஆய்ந்த ஆங்கில நாட்டுப் பாராளு மன்றம் பெயர் பெற்ற "பர்னர்டோ சட்டம்" என்பதனை 1891-ஆம் ஆண்டு இயற்றி பர்னர்டோ போன்றார் நடத்தும் பள்ளிகளுக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்கக் கூடாது எனப் பாதுகாப்பளித்தது. டாக்டர் தம் வாழ்நாள் பூராவும் அறுபதாயிரம் சிறுவர்களின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தி, இன்றும் உலகின் நாற் பக்கங்களிலும் பர்னர்டோவின் இல்லத்தைச் சேர்ந்தோர் பலர் இருக்கக் காணும்படி சிறந்த தொண்டாற்றிய அப்பெம்மான், பெரியோன் 1905-ஆம் ஆண்டு இயற்கை எய்தினர்.

வாழ்க அவர் பணி! வளர்க அவரது தொண்டு!!

— "திராவிட நாடு"

---

## அறிவுக் கதிர்

குருடனுக்குக் கதிரவனின் இளங்கதிர் தெரியாது செவிடனுக்குச் சேவல் கூவுவது கேட்காது. அதுபோலத்தான் திராவிடரின் எழுச்சியை அகந்தைகொண்ட ஆரியர் அறியார். ஆனால் அறிவுள்ளோர் அறிவர்.

தேர்தலுக்குத் தம்பட்டம் தயாரிக்கும் இடமல்ல நமது கட்சி. திராவிட நாட்டு விடுதலைக்காக அமைந்திருக்கும் பாசறை.

சென்ற இதழ் தொடர்ச்சி :—

# மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

### நாடகத்தில் உலவுவோர்

| | | |
|---|---|---|
| பெரிய மருது<br>சின்ன மருது | ... | சிவகங்கை ஜமீனைச் சேர்ந்தவர்கள் |
| முத்துவடுகநாத உடையணத் தேவர் | ... | சிவகங்கை அரசன் |
| வேலு நாச்சி | ... | அரசி |
| புதுக்கோட்டைத் தொண்டைமான் | ... | புதுக்கோட்டை மன்னன் |
| முத்தய்யன் | ... | உண்மைத் தொண்டன் |
| கறுத்தான் | ... | தொண்டைமான் கையாள் |
| கண்ணம்மா | ... | கறுத்தான் மனைவி |
| கர்னல் வெல்ஷ்<br>கர்னல் அக்நியு<br>கர்னல் பிளாக்பர்ன் | ... | வெள்ளைத் தளபதிகள் |
| படமாத்தூர் தேவர் | ... | சிவகங்கையின் புதிய அரசன் |

மற்றும்

ஆர்க்காட்டு நவாப், ஹைதர் அலி, குண்டான், குறுணி முதலியோர்.

### காட்சி 5

புதுக்கோட்டை

அரண்மனை

(புதுக்கோட்டை தொண்டைமானும், ஆர்க்காட்டு நவாபும் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்.)

தொண்டைமான் :—(கிண்டலாக) 'வீழ்த்துவோம் விரோதிகளை — வாழ்த்துவோம் தாயகத்தை!' வேடிக்கையாக இல்லையா தோழரே, இந்த வார்த்தைகள்?

நவாபு :—அச்சா...அச்சா! தாயகமாமே தாயகம். அது எதுவோ தெரியவில்லை தரித்திரம்...

தொண்டைமான்:—இது தாயகம் என்றால் தந்தையகம் எதுவோ...?

நவாபு :—அப்புறம் அண்ணு அகம்...தம்பி அகம்...!ஆஹா...ஹா... நாட்டையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிடுவான்கள், பயல்கள்.

தொண்டைமான் :—இல்லையென்றால் நம்மீது பழி சுமத்துவார்களா, நாம்தான் தேசத்தையே காட்டிக் கொடுத்துவிடுகிறோம் என்று.

நவாபு :—ஓ ஹோ...ஹோ...வாயைத் திறந்து சொல்லியேவிட்டார்களா...? அச்சா...அச்சா...!

தொண்டைமான் :—அவமானம்! அவமானம்! இன்னும் என்னென்ன சொல்கிறார்கள், தெரியுமா? 'ஆர்க்காட்டு நவாபு ஆங்கிலேயரின் கைப் பொம்மை' அப்படி இப்படி என்று கூட...

நவாபு :—ஆஹா...ஆஹா! என்னையும் சொல்லிவிட்டார்களா? உங்களைத்தான் 'புதுக்கோட்டை தொண்டைமான் நயவஞ்சக நரி... சுயநலப் புலி' என்று சொன்னதாக நாம் கேள்விப்பட்டோம்.

தொண்டைமான் :—(மழுப்பியவாறு) ஹி...ஹி...நம் இருவரையுமே குறை கூறுகிறார்கள், நாம் ஆங்கிலேயனிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கிறோமாம்...

நவாபு :—அடா...டா...டா! காட்டிக் கொடுப்பதாவது...பூட்டிக் கொடுப்பதாவது? சோம்பேறிகள்...இவர்களை யார் 'சுதந்திரம்—சுதந்திரம்' என்று கூத்தாடச் சொன்னது?

தொண்டைமான் : அந்த மானங்கெட்ட மருதுப் பயகளும், முத்து வடுகநாதனும் காளையார் கோவிலில் கம்பெனிப் படைகளை எதிர்த்திருக்கிறார்களாம்.

நவாபு :—ஆயிரம் எதிர்த்தாலும் பறங்கிப் படைகளுக்கு 'ஜவாப்' சொல்ல முடியாது. ஏனென்றால், நம் வீரர்களும் அவர்களுடன் கலந்திருக்கிறார்கள் அல்லவா?

தொண்டைமான் :—ஆமாம்...ஆமாம்...

நவாபு :—யார் செத்தால் என்ன? பிழைத்தால் என்ன? நமக்கு வேண்டியது பணம்...ஏராளமான, பணம்! அதனால் வரும் சுகம்...நிம்மதியான சுகம்!

தொண்டைமான் :—(ஆமோதித்து) ஆமாம்...ம்...வெள்ளைக்காரர் ஜெயித்துவிட்டால்...



நவாபு :—சிவகங்கை பாளையத்தை எட்டு வருஷம் கிஸ்திக்கு என்னிடம் விடுவதாக பேச்சு...நாம் பலருக்குக் குத்தகை விட்டு பணம் திரட்டவேண்டும்...

தொண்டைமான் :—நல்ல திட்டம்தான்! வெற்றி கிட்ட அல்லா அருள் புரிவார்!

நவாபு :—அச்சா...அச்சா! தூண்டில் போட்ட பிறகு, கண், தக்கை மீதுதானே இருக்கவேண்டும். வாருங்கள், போர் நிலைமையை அறிந்துகொள்வோம்.

—திரை—

## காட்சி 6

*காளையார் கோவில்*

*அரண்*

(காளையார் கோவிலில் கடும்போர், வெள்ளையருக்கும்.. வீர மறவர்களுக்கும்! மருது சகோதரர்கள் வெஞ்சினமே உருவாக பகைவர்களை வீழ்த்துகின்றனர்; இராணி வேலு நாச்சியார் புரவி மீதேறி போர்க்களத்தில் காற்றாய்ப் பறந்து எதிரிகளைச் சாடுகிறாள். கம்பெனிப் படையில் ஆட்கள் அதிகம்...அத்துடன் புதுக்கோட்டை மன்னனும் ஆர்க்காட்டு நவாபும் அனுப்பிய கூலிப் பட்டாளம் வேறு, மறவர் படை வீழ்கிறது...

அரசன் முத்து வடுகநாதன் தன்னந் தனியனாகப் போரிடுகின்றான். அய்யோ! ஆங்கிலேயரின் கைக் கூலியான கறுத்தான் நன்றியில்லாமல், அரசனின் வலது முழங்கையைத் துண்டாடிவிடுகிறான். துண்டாடப்பட்ட கையிலிருந்தும் புண்பட்ட உடலிலிருந்தும் இரத்தம பெருக்கெடுக்க, அருகில் கிடந்த இருக்கையில் சாய்ந்துவிடுகிறான், வடுகநாதன்! இரத்தம் தோய்ந்த வாளுடன் அங்கு வந்த...)

வேலு நாச்சி :—பிழைக்க வந்தவர்களுக்கு இவ்வளவு ஆணவமா? ஒழிந்தார்கள் அக்கிரமக்காரர்கள். பேராசைப் பிடித்து அலைந்த கூட்டம் இன்று கூண்டோடு ஒழிந்தது. துரோகிகளின் குருதி

யில் தோய்ந்த கத்தி...ஆஹா...பார்ப்பதற்கே இன்பமாக இருக்கிறது.

(வாளுக்கு முத்தமிடுகிறாள். வெறியுணர்ச்சியுடன்...)

ஆணவக்காரர்களின் தலைகளை உருட்டிவிட்ட தங்கள் கரங்களைத் தாருங்கள்...என் அன்பளிப்பைத் தருகிறேன்!

(சோர்ந்து கிடக்கும் அரசனின் வலது கை வெட்டுப்பட்டிருப்பதைக் கவனித்துவிடுகிறாள்.)

வேலு நாச்சி :—(திடுக்கிட்டு) ஆ! பிரபு...என் இதயமே!

வடுகநாதன் :—(சோர்வுடன்) கலங்கக் கூடாது, கண்ணே! தமிழ்ப் பெண்ணல்லவா, நீ!

(அரசி மனம் ஒரு கணம் பேதலித்துப் பின் தீவிர எழுச்சி பெறுகிறது. தன் போர் அங்கியைக் கிழித்து வெட்டுப்பட்ட இடத்தைக் கட்டிக்கொண்டே...)

வேலு நாச்சி :—(கலக்கத்துடன்) கலங்கவில்லை, கண்ணாளா! கண்ணீர் விடவில்லை, நான்! கடல் தாண்டி வந்த கள்வர் கூட்டத்தை ஒழிக்கும் வரை நான் கலங்கப் போவதில்லை. அவர்கள் தாளடி தாங்கி நிற்கும் கயவர் கும்பலை அழிக்கும் வரை நான் கண்ணீர் விடப் போவதில்லை...கண்ணுறங்கப் போவதில்லை! சிவகங்கைப் பாளையத்தரசி வேலு நாச்சியின் அன்புக் கணவனையா அவர்கள் கொன்றார்கள்? இல்லை...அன்பரே...இல்லை ஈடு இணையற்ற தன்மானத்... தமிழ்க் கிழவனையல்லவா கொன்றுவிட்டார்கள்! பறங்கிக்காரன்...

வடுகநாதன் :—பறங்கிக்காரன் என்னை வீழ்த்தியிருந்தால்கூட பரவாயில்லை...வீரப் புண்பட்டு வீழ்கிறோம் என்ற வெற்றிப் பரவசத்துடன் கண்களை மூடுவேன்; இப்போது அந்தத் திருப்தி கூட எனக்கில்லையே, வேலு!

வேலு நாச்சி :—ஏன்...ஏன்? வீழ்த்த முடியாத தங்கள் உடலைச் சாய்த்த, அந்தச் சண்டாளன் வேறு யார்...யார்?

வடுகநாதன் :—அதை எப்படி என் வாயால் சொல்லுவேன்? வேண்டாம், வேலு நாச்சி...அது யார் என்று மட்டும் கேட்காதே...



வேலு நாச்சி :—தாங்கள் சொல்ல மறுப்பதிலிருந்து எனக்குப் புரிகிறது. வேறு யாராக இருக்க முடியும்? காட்டிக் கொடுக்கும் கயமைக் குணம் படைத்த புதுக்கோட்டை தொண்டைமானின் கூலிப் படையைச் சேர்ந்த தமிழனாகத்தான் இருக்க முடியும்.

வடுகநாதன் :—(மெதுவாக) உரக்கச் சொல்லாதே வேலு! அந்நியர் யார் காதிலேயாவது விழப் போகிறது. தமிழகத்திலும் இப்படிப்பட்ட இனத் துரோகிகள் இருக்கிறார்கள் என்பது யாருக்காவது தெரிந்துவிடப் போகிறது...

வேலு நாச்சி :—ஏன் மூடி மறைக்க வேண்டும்? ஊரறிந்த இந்த விஷயத்தைக் கேட்டுத்தான், பக்கத்து நாடெல்லாம் கைகொட்டி நகைக்கிறதே! 'தமிழர்களிடத்திலே ஒற்றுமையில்லை...கருத்து வேற்றுமைக்கு இடமளித்து இனத்தைக் கட்டிக் காக்கும் பண்பு இல்லை...தலைவர்களிடத்தில் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்கும் உயர் மனம் இல்லை' என்று நம் நாட்டில் குடியேறிப் பிழைக்க வந்தவர்கள் கூட, கூடிக் கூடிப் பேசிக் கேலி செய்கின்றனரே!

வடுகநாதன் :—அதையெல்லாம் என் காதில் போடாதே, கண்ணே! சற்றுப் பொறுத்துப் பிரியப் போகும் என் உயிர் இப்போதே பிரிந்துவிடும் போலிருக்கிறது.

வேலு நாச்சி :—(கண்ணீர் மல்கி) என்னென்னவோ சொல்கிறீர்களே, பிரபு. வஞ்சகர் செய்த தீச்செயலை நினைத்தால் என் வயிறு பற்றி எரிகிறது. ஆனால், அதையும் மீறி நெஞ்சின் ஆழத்தில் பதிந்திருக்கும் தங்கள் மீதுள்ள வாஞ்சை அலை அடங்காத் துயரை எழுப்புகிறதே, என்ன செய்வேன்...(அவன் கால்களைக் கட்டிக்கொண்டு) வீரர் வழி வந்தவள் கோழைத்தனமாக நடந்துகொள்கிறேன் என்று பழி சுமத்தாதீர்கள், சுவாமி! என் உயிர் உள்ளவரை தங்கள் உயிர் பிரிவதற்கு சம்மதிக்கமாட்டேன். சம்மதிக்கவே மாட்டேன்...இப்போதே ஓடிச் சென்று பச்சிலை கொண்டுவந்து தங்கள் புண்ணுக்கு மருந்திடுகின்றேன்.

(எழுகிறாள்.)

வடுகநாதன் :—சஞ்சலப்படாதே, நாச்சி! என் புண்ணுக்கு மருந்து வேண்டாம். கண்ணுக்குக் கண்ணானவளே...சோற்றுத் துருத்திகளாக, சொத்தை வாழ்வு வாழ்ந்திடும் இனத் துரோகிகளை வெட்டி வீழ்த்தி தமிழ் மண்ணுக்கு வீர விருந்திடு! அதன் மூலம் நீ புகழ் பெற்று வாழ்ந்திடு! எங்கே, என் ஆத்மா சாந்தியடைய உன் அமுத வாய் திறந்து ஒரு முறை சொல்...வீழ்க அடிமை மனப்பான்மை...!

**வேலு நாச்சி** :—(*ஆவேசத்துடன்*) வீழ்க அடிமை மனப்பான்மை!

**வடுகநாதன்** :—(*தெளிவுடன்*) வெல்க சிவகங்கைச் சீமை...

**வேலு நாச்சி** :—(*அடங்காத் துயருடன்*) வெல்க சிவகங்கைச் சீமை!

**வடுகநாதன்** :—(*உணர்ச்சியுடன்*) வாழ்க செந்தமிழ் நாடு...

**வேலு நாச்சி** :—(*சோகத்துடன்*) வாழ்க செந்தமிழ் நாடு!...சற்று இருங்கள். நான் சென்று பச்சிலை பறித்து வருகிறேன்!

(சோகந் தாங்காத இதயத்துடன் ஓடுகிறாள். 'வாழ்க செந்தமிழ் நாடு' என்று ஒலியுடன் கூறிக்கொண்டேயிருக்கிறான், அரசன். அந்த வழியாக, வெள்ளைக்காரன் கர்னல் பான்ஷோர், கறுத்தான் இருவரும் நான்கைந்து சிப்பாய்களோடு வருகின்றனர். வயது முதிர்ந்த அரசனால் எழுந்திருக்கவும் முடியவில்லை.)

**பான்ஷோர்** :—இத்தனை நாட்களாக உம்மைத்தான் எதிர்பார்த்திருந்தேன், வடுகநாதரே! ஏய் கருத்தான்! இவரைக் கைது செய்து அழைத்து வா!

(செல்கிறான். சிப்பாய்கள் அருகே சென்றபோது அரசன், இடது கரத்தில் வாளேந்தி தள்ளாடித் தள்ளாடி அவர்களைத் தாக்க முயல்கிறான். அடடா! திடகாத்திரமான சிப்பாய்கள் ஒன்று சேர்ந்து அவனை அடித்து நொறுக்கிவிடுகின்றனர். அப்போது சுழலும் வாட்களுடன் ஓடிவந்து அவர்களை விரட்டியடிக்கின்றனர், மருது சகோதரர்கள். கறுத்தான் மறைந்துகொள்கிறான். அரசனைத் தன் மடியில் கிடத்திக்கொள்கிறான், சின்ன மருது.)

**சி. மருது** :—அரசே! அரசே!!

**பெ. மருது** :—பிரபு! பிரபு!!

**வடுகநாதன்** :—(*மூச்சுத் திணற*) என் சக்தி அடங்கி வருகிறது, தம்பிகளே! வேலு நாச்சி உங்கள் உடன் பிறந்தவளைப்போல... உங்களை நம்பிதான் சிவகங்கைச் ஜமீனையும், வேலு நாச்சியையும் விட்டுவிட்டுச் செல்கிறேன்.



**சி. மருது** :—எங்கள் மூச்சு இருக்கும் வரை நாங்கள் அடிமை வாழ்வு வாழமாட்டோம், அரசே! அரசியாரையும் கைவிடமாட்டோம்.

**வடுகநாதன்** :—என் ஒரே விருப்பம்...

**பெ. மருது** :—சொல்லுங்கள், பிரபு!

**வடுகநாதன்** :—வேலு நாச்சி பச்சிலைக்காக, இதோ...இந்தப் பக்கம் போனாள். அவளும் நீங்களும் இப்போதே இந்த இடத்தை விட்டு அகன்றுவிடுங்கள்.

**சி. மருது** :—என்ன :—நமக்குச் சொந்தமான இடத்தை விட்டு விட்டா...

**வடுகநாதன்** :—பற்றுதலையும் வீரத்தையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் நேரமல்ல, இது. நாச்சி இங்கு வருவதற்குள், நீங்கள் அந்தப் பக்கம் சென்று அவளை அழைத்துச் செல்லுங்கள். மைசூர் மகாராஜா திண்டுக்கல்லில் இருக்கிறாராம். அவரிடம் செல்லுங்கள். அவர் ஆதரவுடன் மீண்டும் வெள்ளையரை எதிர்த்துப் போராடுங்கள்.

**பெ. மருது** :—நம் சீமையை விட்டுப் போகவே மனம் வரவில்லை. இறந்தாலும் இங்கு இறப்பதே சிறந்தது.

**வடுகநாதன்** :—விவாதம் ஒன்றும் வேண்டாம். என் கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள்; இப்போதே தப்பிவிடுங்கள்...!

(அரசன் மூச்சு நிற்கிறது. மருது பாண்டியர், எழுந்து வணங்கிவிட்டு நீர் சிந்தும் விழிகளுடன், நாச்சியார் சென்ற திசையில் நடக்கின்றனர். மறைந்திருந்த கறுத்தான் ஆட்களுடன் வந்து அரசனைத் தூக்கிச் செல்கிறான், அதிகாரத்தோடு.)

—திரை—

## காட்சி 7

*காளையார் கோவில்*

*காடு*

(வேலு நாச்சி பச்சிலையுடன் வருகிறாள்; எதிர்ப் பக்கத்திலிருந்து வந்த மருதிருவர், முத்தய்யன் ஆகிய மூவரும் அவளைச் சந்திக்கின்றனர்.)

**பெ. மருது** :—வேலு...!

(அவர்களை வேதனையுடன் ஏறிட்டு நோக்குகிறாள்.)

**சி. மருது** :—(துயருடன்) கப்பல் கவிழ்ந்து விட்டதம்மா!

**வேலு நாச்சி** :—ஆ! என் கண்ணாளர் இறந்துவிட்டாரா? பாவிகள்—என் கண்ணைப் பறித்துக்கொண்டார்களே...என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டார்களே!

**பெ. மருது** :—நாங்கள் இருக்கும்வரை நீ எதற்கும் கவலைப்படாதே, வேலு!

**வேலு நாச்சி** :—அய்யோ! நான் இப்போதே அவரிடம் போக வேண்டும். போய் பீறிட்டுக்கொண்டுவரும் கண்ணீரை அவருக்கு அபிஷேகம் செய்யவேண்டும். அப்போதுதான் எனக்கு கொஞ்சம் ஆறுதலாவது கிடைக்கும்.

**சி. மருது** :—நீ அங்கே போகக் கூடாது, அம்மா! சூழ்நிலை தெரியாமல் பேசாதே!

**வேலு நாச்சி** :—அப்படிச் சொல்லாதீர்கள், அண்ணா! அவரைப் பார்க்கவில்லையென்றால் என் இருதயம் நின்றுவிடும்.

**பெ மருது** :—நாம் இந்தக் கணமே திண்டுக்கல் போகவேண்டும். புறப்படு, வேலு! குதிரைகள் தயாராக உள்ளன...

**வேலு நாச்சி** :—நான் வரமாட்டேன், என் உயிருக்கு உயிரான அரசரின் உடலை அனாதையாக விட்டுவிட்டு நான் வரவே மாட்டேன். என் மனம் முறிந்துவிட்டது. நான் பகைவர்களிடம் சிக்கி சிதைந்து போனாலும் கவலையில்லை. இந்த நன்றி கெட்ட நாடு அழிந்து போனாலும் கவலையில்லை.

**சி. ம ரு து** :—தாங்க முடியாத துன்பம் வந்தபோதுதானம்மா தனித் தைரியத்துடன் இருக்கவேண்டும். வா, ஆக வேண்டியதைக் கவனிப்போம்.

**பெ. மருது** :—வா, வேலு!

(வேலு நாச்சியின் கையைப்பற்றி இழுத்துச் செல்கிறான்.)

**சி மருது** :—(முத்தய்யனிடம்) வருந்தாதே, முத்தய்யா! நீ இங்கேயே இருந்து எங்களுக்கு அடிக்கடி செய்தியனுப்பிக்கொண்டிரு. வரட்டுமா?



**முத்தய்யன்** :—(கரங்குவித்து) செய்யுங்க, சாமி!

(சின்ன மருதுவும் செல்கிறான். முத்தய்யன் கலங்கும் கண்களுடன் அவர்களைப் பார்த்துக்கொண்டு நிற்கிறான்)

—திரை—

## காட்சி 8

சிறுவயல்

முத்தய்யன் வீடு

(முத்தய்யனும் அவன் மனைவி முனியம்மாளும்)

**முத்தய்யன்** :—தாங்க முடியாத துன்பம் வந்தபோதுதாண்டி தனித் தைரியத்துடன் இருக்கணும்.

**முனியம்மா** :—(எரிச்சலுடன்) தெரியும்-தெரியும்! நாக்கிற்கு ருசியா திங்கறதுக்கு சோறும், மனசுக்கு ஆசையா கட்டிக்கிறதுக்கு துணியும் இல்லை. வீடுங்கற வீட்டிலே நாலு அரிசி அள்ளிப் போட்டு அடுப்புப் பத்த வைக்க விதியில்லை. வீரம் பேசிக்கிட்டிருந்தா போதுமா? அப்புறம் வயித்து மேலே ஈரத் துணி போட்டுதான் படுத்துக்கணும்...

**முத்தய்யன்** :—முனியம்மா! என் கோபத்தைக் கிளறாதே. நம்ம தாய் நாடு...

**முனியம்மா** :—ஆமா(ம்). நாடு கிடக்கிற நிலையை நினைச்சு நீ பரிதவிக்கிறே; வீடு இருக்கிற இருப்பைப் பார்த்து நான் அழுது சாகிறேன்.

**முத்தய்யன்** :—என்னை என்னடி பண்ணச் சொல்றே. மழை பெய்து எத்தனை வருசமாச்சு. மானம்தான் ஏழைங்க வயித்திலே அடிச்சிடுத்தே.

**முனியம்மா** :—அதும்(ம்) மேலே என் பழியைப் போடுறே.

**முத்தய்யன்** :—உனக்குத் தெரியாது, முனியம்மா! நீதி நெறி தவறாம ஆளுகிற அரசன் நாட்டிலே மாதம் மும்மாரி பொழியுமாம். பறங்கிப் பயலுக நம்ம சீமையிலே எப்ப காலை வச்சானுகளோ, அப்பவே நம்மை தரித்திரம் புடிச்சுடுத்து. கயவாளிப் பயலுக என்னைக்கு நம்ம ராசாவைக் காட்டிக் கொடுத்தானுகளோ அன்னைக்கே மாச மழை தவறிப் போச்சு. மகாலட்சுமி

மாதிரி இருப்பாங்க நம்ம ராணி வேலு நாச்சியம்மா. எட்டு வருசமா மருது அண்ணச்சிகளோடே காட்டிலும் மேட்டிலும் வாழுறாங்க.

முனியம்மா :—ஆமா...ராணியை தலைமேல தூக்கி வச்சு ஆடு

முத்தய்யன் :—வலே! அந்த அம்மாவைப் பற்றி ஏதாவது சொன்னே உன்னை வெட்டி குழி தோண்டிப் பொதைச்சுபுடுவேன். உனக்கென்னடி தெரியும் அவங்க அருமையும், மருதய்யங்களோட பெருமையும். வெள்ளைக்காரன் நம்ம சீமையை எட்டு வருசத்துக்கு நவாபு கிட்ட குத்தகைக்கு விட்டானே... நவாபு நம்ம ஜனங்களண்ட ஒரு சல்லிக் காசு வசூல் பண்ண முடிஞ்சுதா...பார்த்தியா? நல்ல வேளையா மானம் காஞ்சிடுச்சு. அதை சாக்கு சொல்லி நம்ம சீமைகாரங்க ஒரு காசுகூட நவாபுக்கு கிஸ்தி கட்டல.

முனியம்மா :—நீ ஊரிலே ஒவ்வொரு மகருக்கும் வசூல் பண்றியே...அந்தப் பணத்தை என்ன செய்யறே. எல்லா ஊரிலேயும் வசூல் செய்யற பணத்தை வேறு உங்கிட்ட கொண்டுவந்து கொடுக்கறாங்க.

முத்தய்யன் :—அதெல்லாம் அரசாங்க விஷயம். நீ போய் மூலையிலே முடங்கிக் கிட.

முனியம்மா :—(செல்லமாக) இவ்வளவு வசூல் பண்றியே, அதிலே தான் அஞ்சு பத்து எடுத்து குடும்பத்தைப் பார்த்தா என்னவாம்?

(அவன் தோள்மீது கையை அன்போடு வைக்கிறாள்.)

முத்தய்யன் :—சீ! எடு கையை. வறுமை வந்துட்டா எது வேணு மானாலும் செய்துடறதா என்ன? நான் நம்ம ராசா குடும்பத்துக்கு துரோகம் செய்யமாட்டேன்.

முனியம்மா :—நம்ம ராசா குடும்பமா? அப்படின்னு ஊரிலே வசூலாகிற இந்தப் பணம் ராணிக்குப் போவுதா?

முத்தய்யன் : அந்த வீண் கதையெல்லாம் உனக்கு வேண்டாம். போடி, உள்ளே!

முனியம்மா :—போவட்டும்...உன்னைப் பார்க்கிறதுக்கு அடிக்கடி ஒரு கிழவரு வாரே...அவரு யாரு? இந்த ரகசியமெல்லாம் எனக்குச் சொல்லக் கூடாதா?

முத்தய்யன் :—முனியம்மா!



முனியம்மா :—(ஆசையுடன்) என்ன, மச்சான்!

முத்தய்யன் :—உனக்கு மரியாதையா சொல்றேன். போ, உள்ளே! ...ம்...போடின்னு...

(முனியம்மா வெறுப்புடன் கழுத்தை நொடித்துவிட்டுப் போகிறாள். ஒரு வாலிபன் அவசரமாக ஓடிவந்து முத்தையன் காதில் ஏதோ சொல்கிறான்.)

முத்தய்யன் :—எங்கே...மாந்தோப்பிலா இருக்காரு.

வாலிபன் :—ஆமா(ம்).

முத்தய்யன் :—சரி. இதோ வர்றேன்.

(எழுந்து உள் அறைக்குச் சென்று ஒரு சிறு மூட்டையை எடுத்து வருகிறான். இருவரும் வெளியே செல்கின்றனர். இதைக் கவனித்துக்கொண்டிருந்த முனியம்மாவின் முகத்தில் கேள்விக் குறி படர்கிறது.)

—திரை—

## காட்சி 9

சிறுவயல்

ஒரு மாந்தோப்பு

(மங்கலான நிழலில் முத்தய்யனும், அந்த வாலிபனும் வருகின்றனர். அங்கு ஒரு கிழவன் உள்ளான்.)

முத்தய்யன் :—(கை கூப்பி) வணக்கம், சாமி!

கிழவன் :—வா, முத்தையா! ஒவ்வொரு வருஷத்துக்கும் நீ எவ்வளவோ மாறிவிட்டாய்.

முத்தய்யன் :—(வருத்தமுடன்) சின்ன அய்யா! நீங்க இப்படியெல்லாம் கஷ்டப்படறதை நினைச்சா வருத்தத்தைத் தாங்க முடியலைங்க.

கிழவன் ;—உஸ்...நான் சீக்கிரமா போயாகணும். ஊர் முழுதும் நிலைமை எப்படியிருக்கிறது. அதை மட்டும் சொல்.

முத்தய்யன் :—கமுதி, காளையார் கோவில், திருமயம், சிவகங்கை முதலிய இடங்களில் ஜரூரா வேலை செய்து வருகிறோமுங்க.

ஒருத்தரும் நவாபுக்கு கிஸ்தி கட்டல. அவனும் முடிந்த வரை பார்த்துட்டான். ஒண்ணும் நடக்கல. இந்த வருசம் வசூல் முழுதும் இந்த முடிப்பில் இருக்கு. இதோ...வழிச் செலவுக்குக் கட்டுச் சோறு கொண்டாந்தேன். வைச்சுக்குங்க ...பெரிய அய்யாவையும் இராணி அம்மாவையும் விசாரிச்சதா சொல்லுங்க.

கிழவன் :—நாங்க இன்னும் முப்பது நாளில் இங்கே வந்துவிட இருக்கிறோம். அதற்குள் குறைந்தது ஐயாயிரம் வாலிபர்களை யாவது தயார் படுத்தி வைத்துவிடுங்கள்.

முத்தய்யன் :—நாங்க இப்பவே தயாருங்க. விவரமா இந்த ஓலையில் எழுதியிருக்கிறோம். இந்தாங்க...நீங்க நாளைக்கே வந்துட்டா லும் சமாளிச்சுக்கிடலாம்.

(கிழவன் ஓலையைப் பெற்றுக்கொண்டு, முடிச்சுக்களுடன் செல்கிறான். முத்தய்ய னும் வாலிபனும் கை கூப்பி விடையிறுக் கின்றனர்.)

(தொடரும்)

— திரை —


# சமூக நூல் பயிற்சிப் புத்தகம்

இயற்றியவர் :

T. S. உமாபதி, M. A., . T., (Dip-in-Geog.)

| | |
|---|---|
| 6-ஆம் வகுப்பு | 0 10 0 |
| 7-ஆம் வகுப்பு | 0 10 0 |
| 8-ஆம் வகுப்பு | 0 10 0 |

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக் கல்வி' ஆபீஸ்)

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.


# பாலாற்றின் வரலாறு

(ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி.)

## இலக்கியம்

கலிங்கத்துப் பரணியில் முன்னூற்றறுபத்தேழாம் செய்யுள் காஞ்சிமன்னன் படையெழுச்சியைச் சொல்லும்போது,

பாலாறுகுசைத்
  தலைபொன் முகரிப்
பழவா றுபடர்ந
  தெழுகொல் லியெனு
நாலா றுமகன்
  றொருபெண் ணையெனு
நதியா றுகடந்
  தூநடந் துடனே

என்று வழிக்குக் குறுக்கே வந்த ஆறுகளைக் குறிக்கிறது. அப்போது பாலாறு காஞ்சீபுரத்துக்கு வடக்கில் ஓடிக்கொண்டிருக்கவேண்டும்.

## ஆற்றை மாற்றினான்

பின்னர் காஞ்சி மன்னர்களின் தண்டநாயகரில்ஒருவரானகுண்டகோபால ராயர் பழம் போக்கை அடைத்து, தெற்கே திருப்பி விட்டதாகக் கூறுகிறார்கள். காவேரிப பாக்கத்தை அடுத்த கொண்டாபுரம் கோயில் சுவரில் ஒரு கல்வெட்டு, 'இது பாலாற்றுக்குத் தென்பால் என்கிறது. இபபோது கோயிலுக்குத் தென்பால்தான் பாலாறு ஓடுகிறது. சேய்க்குத் தாயின் பால்போல் நன்செய் புன்செய்களுக்குப் பாசனம் அளிப்பதுபற்றி, இதைப் பால் ஆறு என்னக் குறையில்லை. புராண வரலாறுபடி, நந்திதேவர் நிலவுலகில் கல்மலையாய் வந்தாரென்றும், அவருக்கு அபிஷேகம் செய்த பால் ஆறாகப் பெருகி உலகு ஊட்ட கோலார் சித்தூர் சேலம் வடஆற்காடு செங்கல்பட்டு ஆக ஐந்து ஜில்லாக்களில் பாய்கிறதென்றும் ஐதீகம்.

## உற்பத்தி

நந்தி துர்க்கம் மலை மைசூர் ராஜ்யத்தில் உள்ளது. அதன் உச்சியில் ஒரு கோவில் கிணற்றிலிருந்து நந்தி வாய் வழியாய் நீர் விழுகிறது. அம்பாஜி துர்கம் ரஹிமான் குகைகளின் நடுவே ஓடி கௌதம் குட்டையண்டை சிற்றாறு ஆகிறது. சோமாம்புதி, அமானிகரை, ஜங்கம் கோட்தாண்டி எனமண்டஹள்ளியண்டை சின்ன ஏறுவுடன் கூடி, பௌரிங் பேட்டையில் பேதமங்கலம் ஏரியில் விழுந்து புறப்பட்டு கங்குந்தி ஜமீனில் கிருஷ்ணபுரம் வழியாக கணவாய்களுக்கிடையே ஓடி வாணியம்பாடியண்டை வடஆற்காட்டில் நுழைந்து ஆம்பூரண்டை மலட்டாறும், குடியேற்றத்தின் கிட்டே கௌண்டின்யா நதியும் பள்ளிகொண்டை பக்கத்

தில் அகஹரம் ஆறும், திருவலம் சமீபம் பொன்னையாறும், வாலாஜாபாத், சீவரம் அருகே செய்யாறும், படாளத்துக்குக் கிழக்கே கிளியாறும் வந்துகூட இருநூற்று முப்பது மைல் ஓடி சதுரங்கப் பட்டணத்தண்டை வங்கக் கடலில் சங்கமம் ஆகிறது.

## நாலு ஆறு கூடி

பாலாற்றின் உப நதிகள் பல. அவற்றுள் மலட்டாறு, கௌண்டின்யா நதி, அகஹரம் ஆறு, பொன்னையாறு, செய்யாறு, கிளியாறு ஆகிய ஆறும் பெரியவை. இதனால்தானோ என்னமோ தமிழில் ஒரு பழமொழி "நாலு ஆறு கூடி ஒரு பாலு ஆறு ஆயிற்று" என்று வழங்குகிறது. இந்த உப நதிகளும்கூட பாசனத்துக்கு மிக உதவுகின்றன. இவற்றில் பொன்னையாற்றின் குறுக்கிலும், செய்யாற்றுக்குக் குறுக்கிலும் நூறாண்டுகட்கு முன்னமே அணை கட்டினார்கள். கௌண்டின்யா நதியில்தான் இன்னும் கட்டாமல் இருக்கிறார்கள்.

## திருமுக்கூடல்

பாலாற்றின் உப நதிகள் வந்து கலக்கும் இடங்களெல்லாம் திருமுக்கூடல்களே. அலகாபாத்—பிரயாகை போன்ற திரிவேணி தீர்த்தங்களே. அகஹரம், கௌண்டின்யா, பாலாறு கலக்குமிடம் சுற்றி ஆற்றுஊர் என ஒரு தீவு உண்டு அதில் விசுவநாதர் கோவிலும் சங்கமுக ஈசுரர் கோவிலும் உண்டு. செய்யாறும் பாலாறும் கூடுமிடம் திருமுக்கூடல். அங்கே பெரிய விஷ்ணு ஆலயம் உண்டு. கிளியாறு கூடலிலும் ஒரு கோயில். பொன்னையாறு கூடுமிடம்தான் திருவல்லம்.

## உப நதிகள்

மலட்டாறு பல்லவனேரிக்கு மேற்கே உற்பத்தி ஆகி நாய்க்கனேரி கணவாய் வழியாக வந்து ஆம்பூருக்கருகே பாலாற்றில் கலக்கிறது. கௌண்டின்யா நதி, மூலபாகல் பக்கம் குருடுமலையில் உற்பத்தியாகி வழியில் பல ஏரிகளை நிரப்பிவிட்டு, பல்லவனேரியைச் சுற்றி கணவாய் வழியே ஓடி குடியேற்றத்தண்டை பாலாறுடன் கலக்கிறது. குருடுமலை என்பது கூடுமலையின் மருவு. கணேசரிடம் வரம் கேட்க தேவர்கள் கூடின இடம். மலைமேல் கோவிலில் கௌண்டின்ய ரிஷி சிலை உண்டு.

அகஹரம் ஆறு (அக—பாவம்; ஹரம்—போக்கி) புண்ணியத் திராவ நதி என்றும் பேர் பெறும். இது ஜவ்வாது மலையில் உற்பத்தியாகி பால் நாட்டகம் வழியே ஓடி, பள்ளிகொண்டைக் கருகில் பாலாற்றில் கூடுகிறது. செய்யாறு, சேலம் வட ஆற்காடு எல்லையில் செங்கம் தாலுக்காவில் உற்பத்தியாகி தென் ஆற்காட்டில் நுழைந்து பிறகு வட கிழக்கு நோக்கி ஓடி, நான்கு உபநதிகளுடன் கூடி தண்டு சீவரத்துக்கும் இடையே பாலாற்றுடன் கலக்கிறது. கிளியாறு வந்தவாசி மலையில் உற்பத்தியாகி சில ஏரிகளை நிரப்பி மதுராந்தகம் வழியாக வந்து கடலுக்கு 10 மைல் மேலே பாலாற்றில் கலக்கிறது.

## ஒன்பதில் ஒன்று

பாலாறும் ஒரு புண்ய நதி என்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பன்னிரண்டாண்டுக்கொருமுறை நடக்கும் மகாமகத்தில் ஒன்பது புண்ய நதிகள் சேருவதாகவும் அவற்றின் பெயர்கள், கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, ஸிந்து, காவேரி, கிருஷ்ணை, பாலாறு என்றும் கூறப்படுகின்றன. பாலாற்றங்கரையில் சிவ-விஷ்ணு ஆலயங்கள் மாறிமாறி அமைந்திருக்கும். பள்ளிகொண்டை, விரிஞ்சிபுரம், திருவலம், காஞ்சீபுரம் முதலியன பாலாற்றங்கரையில் உள்ளன. உப நதிகளான பொன்னையாற்றங்கரையில் வள்ளிமலையும், செய்யாற்றின் கரையில் திருவோத்தூரும் உள்ளன. பாலாற்றில் முழுகும்முன் சொல்லும் ஸ்தோத்திரம்:—

> நந்தி பாதோத்பவே தேவீ
> ஸாக்ஷாத் ஸாகர காமினீ
> பயஸ்வினீ நமஸ் துப்யம்
> மம பாபம் வ்யபோஹதா.

## வீணாவதில்லை

மற்றை ஆறுகளைப்போல் அல்லாமல் பாலாறும் அதன் உப நதிகளும் ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பாசனத்துக்கே உபயோகமாகின்றன. ஆற்காட்டுக்கு 5 மைல் கிழக்கே பாலாற்றுக்கு குறுக்கே 1857-ம் வருஷம் அணை கட்டப்பட்டது அதன் நீளம் 2634 அடி உயரம் 8 அடி. வடபுறம் 22-ம் தென்புறம் 20-ம் ஆக 42 மதகுகள் உள்ளன. வடபுறம் காவேரிப் பாக்கம் ஏரியும். தென் புறம் மாமண்டூர் ஏரியும் இதனால்தான் நிரம்புகின்றன. இதிலிருந்து புறப்படும் ராஜவாய்க்கால்களுக்கு சக்கரமல்லூர் கால்வாய், பொன்னப்பன் தாங்கல் கால்வாய், மகேந்திரவாடி கால்வாய் என்று பெயர்.

## முதல் அணை

பொன்னையாறு அணை 1853-ல் கட்டப்பட்டது அதன் நீளம் 792 அடி. இதன் கிழக்கு மதகு வாலாஜா தாலூகா ஏரிகளுக்கும் மேற்கு மதகு குடியேற்றம் தாலூகா ஏரிகளுக்கும் தண்ணீர் தருகிறது. ஏழு மைல் போன பின் இதன் கால்வாய் இரண்டாகப் பிரிந்து சோளிங்கபுரத்துக்கு ஒன்றும் கொடக்கல்லுக்கு ஒன்றுமாகப் போகிறது

## இரண்டாம் அணை

செய்யாறு அணை 1826-ல் திருவத்தூருக்கு அருகே கட்டப்பட்டது. இதன் நீளம் 315 அடி அதோடு 26 அடி கண் 9-ம் 15 அடி கண் 6-ம் கொண்ட பாலமும் உண்டு. தென்புறம் ஓரே வாய்க்கால் வந்தவாசி தாலூக்கா ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு சேர்க்கிறது.

இந்த மூன்று அணைகளைத் தவிர எண்ணிறந்த ஆற்றுக் கால்வாய்கள் அங்கங்கே கரையோர

கிராமங்களுக்குப் பாசனம் அளிக்கின்றன. சுமார் 3500 ஏரிகள் இவ்வாற்று நீரால்தான் ஆண்டுதோறும் நிரம்புகின்றன.

## பாலங்கள்

பாலாற்றின் மேல், மேல்பட்டியண்டை ஒன்றும் பொன்விளைந்தகளத்தூர் (ஒத்திவாக்கம்) அருகில் ஒன்றும் ஆக 2 ரயில் பாலங்கள் உண்டு. இரண்டும 18 கண் உள்ளதுதான். முந்தையது 2376 அடி, பிந்தையது 2160 அடி. 1903-ம் ஆண்டு வந்த (வாணியம்பாடி) வெள்ளத்தால் மேல்படி பாலம் சேதம் அடைந்ததென்று அதில் ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவை தவிர; வாணியம்பாடி நகர் நடுவிலும், காட்பாடி-வேலூர் இடையிலும், ஆற்காடு-ராணிப்பேட்டை இடையிலும், செங்கல்பட்டு புக்கத்துறை இடையிலும் ஆக நான்கு வண்டிப்பாலங்கள் உள்ளன. மேலும் வாணியம்பாடி, ஆம்பூர், பள்ளிகொண்டை, ஆற்காடு, கோளிவாக்கம், காஞ்சிபுரம், வாலாஜாபாத், திருமுக்கூடல், செங்கல்பட்டுபடாளம், கிளியாறு கூடல், பாண்டூர், நெரும்பூர், வேப்பஞ்சேரி, காலூர், பாலாறு தெற்கு லாக் ஆக இருபது இடங்களில் "காஸ்வே" இருக்கிறது.

## தொண்டை நாடு

பாலாறு பாய்கிற பிரதேசத்துக்கு இலக்கியத்தில தொண்டை மண்டலம் என்று பெயர். இது 24 கோட்டங்களாகப் பிரிந்திருந்ததாம். அப்பெயர்கள் பல இன்றளவும் வழக்கில் உள்ளன. சில சிதைந்து பட்டன. தமிழ் வேந்தர்க்குப்பின் முகமதிய மன்னர்களும அவர்களுக்குப்பின் ஆங்கிலேயர்களும் ஆட்சிபுரிந்து அக்கோட்டங்களை தாலூகா, பிர்க்காகளை மாற்றிவிட்டார்கள். பாலாற்றின் கரை ஓரம் உள்ள முக்கிய பட்டணங்களில் சிலவற்றைப் பற்றிச் சொல்லுவோம்.

## முக்கிய பட்டணங்கள்

வாணியம்பாடி: பாலாற்றின் கரையில் உள்ள முதல் தமிழ் நகரம். இதில் இஸ்லாமியா காலேஜும் மாணவர் விடுதியும் உள்ளன. மிகப் பெரிய மாளிகைகள் பல உண்டு. சென்னை ராஜ்யத்தின் தலைசிறந்த தோல் (தொப்புகள்) பதனிடும் சாலைகள் எல்லாம் இங்குள்ளன. வாணியர் ஒரு காலத்தில் இங்கு மிகுதியாயிருந்தனர் இப்போது முகமதியர் மிகுதி. இந்து உயர்நிலைப் பள்ளியும் உள்ளது.

குடியேற்றம்: தாலூகா தலைநகரான இந்நகர் கௌண்டின்யா நதியின் இருமருங்கிலும கட்டப்பட்டுள்ளது. இங்கு 2 பஞ்சாலைகளும் 10 தீப்பெட்டி தொழிற்சாலைகளும் 1 பட்டு நெசவாலையும் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையும் உள்ளன. வாரந்தோறும் மாட்டுச் சந்தையில் உயர்ந்த ஜாதிக் காளைகள் விற்பனையாகின்றன. சமீபத்தில் மணிலாப் பயறு மார்க்கட்டு திறக்கப்பட்டது.



## கோட்டைக் கோயில்

வேலூர் வட ஆர்க்காட்டின் தலைநகர். இதில் உள்ள கோட்டை மிக்க அழகும் புகழும் வாய்ந்தது. ஜலகண்டேசுரர் ஆலயம் இதற்குள் இருக்கிறது. இதன் கலியாண மண்டபத்தைப் பெயர்த்து கப்பலேற்றி இங்கிலாந்துக்கு கொண்டுபோக திட்டமிட்டிருந்தார்களாம். தெய்வச் செயலாக அதற்கென வந்த கப்பல் வழியில் முழுகிவிடவே யோசனை கைவிடப்பட்டதாம். தென்னிந்தியாவில் சிறந்த கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரியும் மெடிகல் காலேஜும் இங்குண்டு. மற்றும் ஊரீஸ் காலேஜ், டீசர்ஸ் காலேஜ் ஆக்ஸிலியம் (பெண்களுக்கு) காலேஜ் முக்கியமானவை. போலீஸ் பயிற்சிக் காலேஜும் மத்திய சிறையும் பெயர் போனவை.

ஆர்க்காடு நவாப்புகளின் தலைநகர். வடஆர்க்காடு தென் ஆர்க்காடு ஜில்லாக்களுக்கு பெயர் அளித்த ஊர். விளைபொருள்களுக்கு விற்பனை ஸ்தலம். வள்ளல் ஸி. அப்துல் ஹக்கீம் கட்டிவைத்த இந்து உயர்நிலைப்பள்ளி ஜில்லா போர்டு வசம் உள்ளது. இதற்கெதிரேதான் இராணிப்பேட்டை இருக்கிறது. இந்நகரம் வீர சொர்க்கம் புகுந்த செஞ்சி மன்னன் தேசிங்கு ராஜன் பக்னி ராணியின் நினைவாக ஆற்காட்டு நவாபு கட்டினது. இங்கு பாரி கம்பெனியார் உரத் தொழிற்சாலையும் மண்ஜாடி தொழிற்சாலையும் சிறுவர் (குற்றப்) பள்ளியும் பார்க்கத் தக்கன.

## கோயில் நகரம்

காஞ்சிபுரம்: முக்தி தரும் ஏழு நகரங்களில் மூன்று சிவஸ்தலம். மூன்று விஷ்ணுஸ்தலம். இக்கச்சியம்பதி சிவ-விஷ்ணு பக்தர் இரு பாலாருக்கும் முக்யம். இங்கு 108 விஷ்ணு, 1008 சிவ ஆலயங்கள் என்று வதந்தி. ஆண்டுதோறும் திருவிழா நடக்கும் ஆலயங்கள் இன்னும் ஐம்பது இங்குள்ளன. காமாட்சி அம்மன் கோயிலை மையமாக வைத்து நாலுபுறமும் நாலு கோபுர வீதிகளும், சுற்றி ராஜ வீதிகளும் எட்டெல்லையிலும் எண்ணிறந்த சிவவிஷ்ணு ஆலயங்களும், மேற்கே ஏகாம்பரநாதரும் கிழக்கே வரதராஜப் பெருமாளும் வானளாவிய கோபுரங்கள் 40-ம் வளமார்ந்த குளங்கள் 10-ம் உள்ளன. வள்ளல் பச்சையப்பர் பிறந்த ஊர், இங்கும் அவர் கலாசாலை ஒன்றுளது. முதலாழ்வார்களில் முதல்வர் பிறந்த ஊர். பரிமேலழகர், கச்சியப்ப சிவாசாரியார், வேதாந்த தேசிகர் பிறந்து வாழ்ந்த ஊர். சங்கரர், மக்வர், ராமாநுஜர் உபதேசம் செய்த ஊர். ஜைனரும் உண்டு. காஞ்சீபுரம்பட்டுச்சேலைகளுக்குப் பேர் போனது.

வாலாஜாபாத்: 1776-ல் வாலாஜா என்று பட்டம்கொண்ட நவஸ்மத் ஆலி பெயரால் 1876-ல் தண்டு ஆயிற்று. பல ஆண்டு காலம ஆங்கிலேயப் படை இருந்

தது. இப்போது இங்கு ஒரு பஞ்சாலையும் இந்துமத பாடசாலை எனும் மாணவர் குருகுலமும் உள்ளன. இங்கும் வாரந்தோறும் மாட்டுச் சந்தை விசேஷம்.

## டச்சுக் கோட்டை

செங்கல்பட்டு: ஜில்லாவின் தலைநகர். கலெக்டரோ போலீஸ் சூப்ரிண்டெண்டோ இங்கு வசிப்பதில்லை. ஊரின் நடுவே ஒரு குன்று. அதன் உச்சியில் பூங்காவும் குடிநீர் டாங்கியும். ஜில்லா ஜட்ஜியும் பல வக்கீல்களும் உள்ளனர்; ஸ்டேட் பாங்கியைத் தவிர வேறு பாங்கிகூட கிடையாது. அன்றாடம் ஆயிரம்பேர் சீசன் டிக்கட்டுடன் சென்னை சென்று வருவதே இது ஒரு சிற்றூரென்பதன் அறிகுறி.

சதுரங்கப்பட்டணம்: 1647-ல் டச்சுக்காரர் வந்த மஸ்லின்களை ஏற்றுமதி செய்தனர். அவர்கள் கட்டின கோட்டையிருக்கிறது. பழைய டச்சு கல்லறையில் 1695 தேதியிட்டதும் ஒன்று. எதிரே டச்சு மாதாகோவிலும் உண்டு. 1751-ல் இங்கே பிரஞ்சுக்காரருக்கும், ஆங்கிலேயருக்கும் போர் மூண்டது. 1818-ல் டச்சும் 1824-ல் பிரிட்டிஷாரும் இதைக் கைப்பற்றினர்.

— 'தினமணி சுடர்"

---

## அறிவுக் கதிர்

யார் மேலானவன்? எல்லோருடைய உரிமைகளையும் மதித்து நடப்பவன் எவனோ அவனே மேலானவன். யார் கீழானவன்? பிறருடைய உரிமைகளை ஈவு இரக்கமின்றி மிதித்து நசுக்குபவன் எவனோ அவனே கீழானவன்.

— இங்கர்சால்

கதிரவன், மலர்களுக்கு ஒளி தருகிறான். அப்படித்தான், கலை, வாழ்க்கைக்கு ஒளி தருகிறது.

— ஆவ்பரி

கடவுளைத் தேட, நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? ஏழைகள், துன்பப்படுபவர்கள், பலவீனர்கள் - இவர்களெல்லாம் கடவுளர் அல்லரோ? இவர்களுக்கு உதவுதல் கடவுட் பணி அல்லவோ?

— விவேகாநந்தர்

அதிகாரத்தால் எழுப்பப்பட்ட அரண்மனைகளைவிடச் சிந்தனையால் எழுப்பப்பட்ட சிறிய ஏடுகளே நெடுங்காலம் நிலைத்து நிற்கும். இது உண்மை. வெறும் கற்பனை அல்ல.

— பிரான்சிஸ் பேகன்

## MINIMUM NUMBER OF WORKING DAYS FOR AIDED ELEMENTARY SCHOOLS.

Copy of the Director Proceedings Dis No. 5820/55 Dated 21-11-55.

Sub: Elementary Education-Aided-Schools-Minimum number of working days-Clarification issued.

The Divisional Inspector of Schools Coimbatore is informed that the minimum number of working days for Elementary Schools is 220 inclusive of 11 T. A. Meeting days and that the minimum number of working days for the pupils should not be less than 209 days as such, whatever may be the weekly holidays or holidays on Sundays. It may be evenmore.

These proceedings will supercede all previous proceedings on the subject for aided schools or schools under public management but it will not affect the existing rules relating to elementary schools.

For Director of Pubic Instruction
ROC No. (38) 55. Dt.

## ஆரம்பப் பள்ளிகளின் வேலை நாட்கள்

உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகள் மாதாந்திர ஆசிரிய சங்கக் கூட்ட நாட்கள் 11 நாட்களையும் சேர்த்து வருடமொன்றுக்கு 220 நாட்கள் இருக்க வேண்டுமென்றும், அதில் வார விடுமுறை—மற்ற விடுமுறை நாட்கள் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் பிள்ளைகளுக்காகக் குறைந்தது 209 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்றும் கோவை டிவிஷனல் கல்வித் தணிக்கையாளருக்குச் சென்னை பொதுக்கல்வி இலாகா இயக்குனர் அறிவித்துள்ளனர்.

இத்திட்டம் இதற்கு முன்னர் பிரசுரிக்கப்பட்ட எல்லா திட்டங்களையும் ரத்து செய்யப்பட்டுப் பொது நிர்வாகஸ்தர்களின் கீழ் இருந்துவரும் ஆரம்பப் பள்ளிகளில் அமுலில் இருந்து வரும். ஆனால் இப்போது இருந்துவரும் ஆரம்பப்பள்ளி சட்டங்களை இத்திட்டம் பாதிக்காது.

For Director of Public Instruction.

# சென்னை நகர் தனியார் பள்ளி நிர்வாகிகள் சிறப்புக் கூட்டம்

கடந்த (10-12-58) புதன்கிழமை மாலை 5 மணிக்கு இக் கூட்டம் திரு. A.R. சேஷாசலம் அவர்கள் தலைமையில் கூடி சமீபத்தில் வெளியிட்ட சென்னை சர்க்கார், ஆரம்பக்கல்வி வகுப்புகளுக்குக் கட்டணம் கூடாது என்ற உத்திரவைப் பரிசீலனை செய்தது.

இந்த உத்திரவு கல்வித் துறையில் வெடிகுண்டு மாதிரி வெடித்தமையால், அநேகர் பள்ளியை நடத்துவதா, மூடுவதா என்ற பிரச்சினையில் பலரகமான யோசனைகள் கூறினர்.

இறுதியில் கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய உபகமிட்டியை அமைத்து அன்றைக்கு உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள அதிகாரமளித்தது.

கல்வித்துறை இயக்குனர், சென்னை சர்க்கார் கல்வி அமைச்சர், முதல் அமைச்சர் உட்பட நம் நிலையை நன்கு உணரும் வண்ணம் ஓர் அறிக்கையை வெளியிடவும், அவர்களைப் பேட்டிகண்டு நன்கு விளக்கவும் உபகமிட்டி அங்கத்தினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

### உபகமிட்டியின் அங்கத்தினர்கள் :

1. திரு. J ராமானுசம் B.A.L.T.
2. ,, G. A. அப்பன்
3. திருமதி. இந்திராணி செங்கல்வராயன்
4. திரு. M. R. சோமசுந்தரம்
5. திரு. K. ஜெகதீசன்
6. ,, எதிராஜுலு நாயுடு
7. ,, T. ராமானுஜாச்சார்
8. ,, கந்தசாமி நாடார்

சங்க நிரந்தர தலைவர்கள் ; காரியதரிசிகள்.

முத்துக்கிருஷ்ணன்
காரியதரிசி.

# ஆசிரியர்கள் பென்ஷன் திட்டம்

## விதிகளில் திருத்தம்

சென்னை, நவ. 26 — ஆசிரியர்களுக்கு பென்ஷன் திட்ட சம்பந்தமான விதிகள் திருத்தி யமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், 1-4-1955ற்கு முன்னாலோ அல்லது 1-4-1958க்கு முன்னாலோ அவர்களின் 55-வது வயது பூர்த்தியாகி, அதே பள்ளியிலோ, அல்லது வேறு எந்தப் பள்ளியிலோ விடாமல், நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்குப் பிறகும் தொடர்ந்து சர்வீஸில் இருந்துவரும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் இத்திட்டம் பொருந்துவதற்காக இத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று ராஜ்ய சர்க்கார் அறிக்கை யொன்று கூறுகிறது.

அறிக்கை மேலும் கூறுவதாவது: இருப்பினும் 60 வயதுக்கு மேற்பட்டு சர்வீஸில் இருப்பவர்களுக்கு இது பொருந்தாது.

அனுமதிக்கப்பட்ட பென்ஷன் ஜில்லா கல்வி அதிகாரிகளின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பள்ளிகளிலோ அல்லது ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுடைய இன்ஸ்பெக்டர்களின் அதிகார எல்லைக்குட்பட்ட பள்ளிகளிலோ வேலையில் உள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மேற் சொல்லப்பட்ட அதிகாரிகளால் சாங்ஷன் செய்யப்படலாம் என்று சர்க்கார் வகை செய்துள்ளனர். தாமதம் ஏற்பட்டால் பென்ஷன் கிடைக்கும் என்பதை எதிர்பார்த்து அதை அனுமதிக்க அக்கவுண்டெண்ட் ஜெனரலுக்கு ஓர் ஷரத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

## உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெறும் வயது

உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெறும் வயது சம்பந்தமான ஷரத்து பின்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

எய்டெட் ஆரம்பப் பள்ளிகளிலும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும், வேலை செய்யும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கட்டாயமாக உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெறுவதற்கான வயது 60 ஆகும். ஸ்தலஸ்தாபனங்கள் எய்டெட் பயிற்சிப் பள்ளிகள், விசேஷப் பள்ளிகள் ஆகியவற்றில் வேலை செய்யும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உத்தியோகத்தினின்றும் கட்டாயமாக ஓய்வு பெறும் வயது 55 ஆகும்.

எய்டெட் ஆரம்பப்பள்ளிகளின் கீழ் வேலை செய்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். பள்ளி நிர்வாகிகளால் வகுக்கப்பட்ட விதிகளுக்கிணங்க 55 வது வயதில் உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெற்றிருந்தால் அவர்களைப் பற்றியவரை கட்டாய ஓய்வு பெறும் வயது 55 ஆகும்

# பள்ளி வாங்க பாலரே....!

(கனக. சுப்பிரமணியன், ஆசிரியர், பெருமங்கலம்)

[பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்கள் தவறுவல் வந்து கற்க வேண்டியதன் இன்றியமையாமையை இனிய முறையில் விளக்கும் பாடல் இது ]

**(ஆடவாங்க அண்ணாத்தே என்ற மெட்டு)**

பள்ளி வாங்க பாலரே—படிக்க வாங்க தோழரே
படித்துப்பாடி ஆடி ஓடி வாழலாம்.
சின்னஞ்சிறு வயதினிலே
சிரித்து ஆடிப்படித்திட்டால்
பெரியவனாய் ஆனவுடன்
வாழ்வில் துன்பம் வராது
படிப்பைப் பார்த்துப் பயந்து நின்றால்
பின்னால் துயரம் ஏராளம்
அதனாலே இனிமேலே
பள்ளி வராமல் நில்லாதே [பள்ளி]

பாட்டுப் பாடின ஐயாவே, படிக்கச் சொன்ன ஐயாவே
எண்ணெழுத்துப் படிப்பினிலே பயனுண்டோ ?
பாடுபட்டுச் சம்பாதிக்க
படிப்பு இன்றி ஆகாது
பார்த்துக் கடிதம் படித்து எழுத
கல்வி போல வேறேது ?
எழுத்தறியாத் தற்குறியாய்
கீலு புரட்டக் கூடாது
அதனாலே இனிமேலே
முன்போல நீ நில்லாதே [பள்ளி]

கவனமாகப் படித்து விட்டால்
பணமும் குணமும் உண்டாகும்
கற்பவற்றில் கவனம் விட்டால்
பேரும் புகழும் மண்ணாகும்
காலத்திலே கற்று விட்டால்
காரியமே கை கூடும்
அதனாலே இனிமேலே
முன் போலே நீ நில்லாதே. [பள்ளி]

# தமிழில் பிறமொழிச் சொற்கள்

**மயிலை சீனி—வேங்கடசாமி**

தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கலாமா? தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பது நல்லதா? பிறமொழிக் கலப்பு தமிழ் மொழிக்கு ஆக்கம் அளிக்குமா? அதனால் தமிழ் மொழி வளருமா? பிறமொழிக் கலப்பினால் பாஷையின் தூய்மை கெடும்; ஆகையினால் தனித் தமிழாக இயங்க வேண்டும் என்பது ஒரு சாரார் கொள்கை. பிறமொழிச் சொற்கள் கலப்பதனால் மொழி வளம் பெறும்; ஆகையால் பிறமொழிச் சொற்கள் கலப்பது நலம் பயக்கும் என்பர் வேறொரு சாரார்.

புதிய புதிய கருத்துக்களும் எண்ணங்களும் தோன்றும்போதெல்லாம், அப்புதிய கருத்துக்களையும் எண்ணங்களையும் விளக்குவதற்காகப் புதிய புதிய சொற்கள் தோன்றுகின்றன. இவ்விதமாக மொழிகள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. பேச்சு வழக்கில் உள்ள எல்லா மொழிகளும் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. மேலும், பேச்சு வழக்கில் உள்ள மொழிகள், பிறமொழிச் சொற்களையும் ஏற்றுக் கொள்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் வேற்று மொழிச் சொற்கள் கலப்பது இயற்கையாகவே ஏற்படுகிற நிகழ்ச்சி. ஒவ்வொரு பாஷைக்காரரும், வேறு மொழி பேசுகிறவர்களோடு ஏதோ காரணங்களினாலே தொடர்பு கொள்கிறார்கள். பல மொழி பேசுகிறவர்களோடு பழக வேண்டியது மனித இயல்பு. இந்தப் பழக்கம் வியாபாரத் தொடர்பினால் ஏற்படலாம். சமயச் சார்பான தொடர்பினால் உண்டாகலாம். அரசியல் காரணமாகவும் அமையலாம். அக்கம்பக்கத்தில் வாழ்வதனால் ஏற்படும் தொடர்பாகவும் இருக்கலாம். எந்தத் தொடர்பாக இருந்தபோதிலும், ஒரு பாஷைக்காரர் பிற பாஷைக்காரரோடு கலந்துறவாடும்போது வேற்று மொழிச் சொற்கள் அம்மொழியில் கலக்கின்றன. கலக்கின்றன என்றால், வரையற்றயில்லாமல் எல்லாச் சொற்களும் கலக்கின்றன என்பது அல்ல. முக்கியமான சில சொற்கள் மட்டும் கலக்கின்றன.

முக்கியமாக, ஒரு மொழியில் இல்லாத சொற்கள் பிறமொழியில் இருக்குமானால், அச்சொற்கள் இல்லாத பாஷையில் அச்சொற்கள் இடம் பெறுகின்றன. இது எக்காலத்திலும், எல்லா நாட்டிலும், எல்லா மொழிகளிலும் ஏற்படுகிற இயற்கை. இதைத் தடுக்க ஒருவராலும் ஆகாது.

இருக்வேதம் போன்ற பழைய வடமொழியிலும் திராவிட மொழிச் சொற்கள் சில காணப்படுகின்றன என்று மொழி

ஆராய்ச்சி வல்லவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். பேச்சு வழக்கில் இல்லாமல் இலக்கிய வழக்கில் மட்டும் இருந்த பிற்காலத்து வடமொழியாகிய சம்ஸ்கிருத மொழியிலும், திராவிட மொழிச் சொற்கள் காணப்படுகின்றன என்றால், பேச்சு வழக்கில், நடைமுறையில் வழங்கி வருகிற மொழிகளில் பிறமொழிச் சொற்கள் புகாமல் இருக்க முடியுமா? மொழி வளர்ச்சிக்குப் பிறமொழிச் சொற்கள் ஓரளவு வேண்டற்பாலன. “ஓரளவு” என்பதை ஊன்றிப் பார்த்தல் வேண்டும். தேவைப்படுகிற சில சொற்களைத்தான் வேற்று மொழியிலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமே யல்லாமல், மனம் போனபடி பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்வது தவறு. அது மொழிக்குத் தீமை பயப்பது ஆகும். ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பது என்றால் அக்கலப்பு இயற்கையாக நிகழவேண்டியதல்லாமல், செயற்கையாகப் புகுத்துவது அல்ல. ஒரு பாஷையில் வேற்று மொழிச் சொற்கள் இயற்கையாகப் புகவேண்டுமே யல்லாமல், செயற்கையாகப் புகுத்தப்படக் கூடாது. அப்படிப் புகும்போது, அந்தப் புதுச்சொல் அதே உருவத்தோடு பிறமொழியில் புகுவதில்லை. பாஷையின் இயல்புக்குத் தக்கபடி சிறு மாறுதல் பெற்று (உருதிரிந்து) புகுகிறது. சிறுபான்மை உரு மாறாமலே சேர்வதும் உண்டு. எல்லா மொழிகளுக்கும் உள்ள பொதுவான இந்த இயற்கை முறை, தமிழ் மொழிக்கும் பொருந்தும்.

தமிழ், பேச்சு வழக்கில் உள்ள உயிருள்ள மொழி. கிரேக்க பாஷையும் இலத்தீன் பாஷையும் ஹீப்ரு பாஷையும் பேச்சு வழக்கில் இருந்த காலத்திலிருந்து நெடுங்காலமாக வழங்கி வருகிற பழைய மொழி தமிழ். எனவே, தமிழ் மொழியில் வேற்று மொழிச் சொற்கள் முற்காலத்தில் கலந்திருக்கவேண்டும், பிற்காலத்திலும் கலந்திருக்க வேண்டும்; இடைக்காலத்திலும் கலந்திருக்க வேண்டும்.

இந்த உண்மையை, வேறு மொழிச் சொற்கள் கலக்கிற உண்மையை, பழந்தமிழர் அறிந்திருந்தார்கள். அறிந்திருந்தபடியினால் தான், தாங்கள் எழுதிய இலக்கண நூல்களில், பிற மொழிச் சொற்களுக்கும் இலக்கணம் வகுத்தார்கள். பிறமொழிச் சொற்களுக்குத் திசைச் சொற்கள் என்று பெயரிட்டார்கள். திசைச் சொல் அல்லாத வடமொழிச் சொற்கள் தமிழில் புகுமானால், அவை எவ்வாறு உரு மாற வேண்டும் என்பதற்கும் இலக்கணம் எழுதினார்கள்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் பாகத (பிராகிருத) மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. பாலி, சூரசேனி ஆகிய பாகத மொழிகளைப் பேசிய பௌத்த சமண சமயத்தார்கள் மத சம்பந்தமாகத் தமிழருடன்



தொடர்பு கொண்டார்கள். அவர்கள் மூலமாக அக்காலத்தில் பாகத மொழிச் சொற்கள் சில தமிழில் கலந்தன. இவ்வாறு, பாகத மொழிகள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்ட சரித்திர வரலாற்றுண்மையை யறியாத பிற்காலத்தவர், இப்பாகத மொழிச் சொற்களை, வடமொழிச் சிதைவு என்று கூறினர். வரலாறு அறிந்தவர், பாகத மொழிச் சொற்கள் நேரடியாகத் தமிழில் கலந்தவை என்பதையும் அவை வடமொழிச் சிதைவு அல்ல என்பதையும் நன்கு அறிவார்கள். முதன் முதலாகத் தமிழில் கலந்த திசைச் சொற்கள் பாகத மொழிச் சொற்களாகத்தான் இருக்கவேண்டும்.

கி. மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் கிரேக்கர்கள் (யவனர்கள்) தமிழ் நாட்டுடன் வியாபாரம் செய்தனர். அன்றியும், சேர சோழ பாண்டிய அரசர்களிடம் கிரேக்க வீரர்கள் காவல் புரியும் வீரர்களாகவும் அமர்ந்திருந்தார்கள். கிரேக்கரின் தொடர்பினாலே தமிழில் சில கிரேக்க மொழிச் சொற்கள் கலந்திருக்கவேண்டும். சம்மட்டி (சவுக்கு) என்னும் பொருள் உள்ள மத்திகை என்னும் சொல் கிரேக்க மொழிச் சொல் என்பதை, செக்கோஸ்லோவேகிய நாட்டைச் சேர்ந்த டாக்டர் கமில் சுவெலபில் அவர்கள் கண்டறிந்தார்.

பத்துப் பாட்டில் ஒன்றாகிய முல்லைப் பாட்டில்,

“ மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் ”

என வரும் அடியில் உள்ள மத்திகை என்னும் சொல், தூய தமிழ்ச் சொல் போலத் தோற்றுகிறதன்றோ? இந்தச் சொல், மஸ்திக்ஸ் அல்லது மஸ்திக என்னும் கிரேக்கச் சொல்லின் திரிபு என்பதை தமிழறிஞர் டாக்டர் கமில் சுவெலிலபில் அவர்கள் ஆராய்ந்து எழுதியிருக்கிறார். (The Yavanas in old Tamil Literature, by Dr. Kamil Zvelebil) இதுவரையில் இச்சொல்லைச் சங்க காலத்துத் தமிழ்ச் சொல் என்று கருதியிருந்தோம். இதுபோன்று இன்னும் சில கிரேக்க மொழிச் சொற்கள் சங்க நூல்களில் கலந்திருக்கக் கூடுமல்லவா?

சங்க காலத்துக்குப் பிறகு ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்திலே வடமொழிச் சொற்கள் தமிழிலே கலப்புற்றன. அவை பெரும்பாலும் சமயச் சார்பான சொற்கள். அவ்வட சொற்கள், தமிழ் மொழி அமைப்புக் கேற்ப உருதிரிந்து வழங்கின.

பின்னர், கி. பி. 15-ஆம் நூற்றாண்டில், ஐரோப்பா கண்டத்திலிருந்து போர்ச்சுகீசியரும். அவருக்குப் பிறகு ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் நமது நாட்டிற்கு வியாபாரத்தின் பொருட்டு வந்தார்கள், அவர்கள் 19-ஆம் நூற்றாண்டு வரையில் வியாபாரம் செய்தார்கள். அக்காலத்தில் அந்த ஐரோப்பியர்கள், போர்ச்சுகீசு பாஷையைத் தமது பொது மொழியாக நமது நாட்டில் வழங்கி வந்தார்கள். ஆகவே, ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் போர்ச்சுகீசு பாஷை நமது நாட்டில் வியாபார மொழியாக வழங்கி வந்தது. அதன் காரணமாகச் சில போர்ச்சுகீசு மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. பீங்கான், மேசை, கதிரை (நாற்காலி) வாங்கு (விசுப்பலகை), அலமாரி, கடுதாசி, சன்னல், பீப்பா, மேஸ்திரி, ஆயா, பாதிரி, துப்பாக்கி, நங்கூரம், சாவி, லங்கர், ஏலம், ஆசுபத்திரி, சப்பாத்து, அலுப்பநேத்தி(குண்டூசி) முதலிய சொற்கள் போர்ச்சுகீசு மொழிச் சொற்கள். இதுபோன்று ஏறக்குறைய நூறு போர்ச்சுகீசு சொற்கள் உள்ளன. இவைகளில் பெரும்பாலும் இப்போது வழக்கிழந்துவிட்டன. மிகச் சில சொற்கள் மட்டும் வழங்குகின்றன.

கி. பி. 14-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், தமிழ் நாட்டில் முகம்மதியர் தொடர்பு ஏற்பட்டது. கர்நாடக நவாபுகள் நமது நாட்டைச் சில காலம் அரசாண்டனர். அவர்கள் காலத்தில், தமிழர்களில் சிலர் இஸ்லாம் மதத்தைத் தழுவி முஸ்லிம் ஆயினர். முகம்மதியர் ஆட்சி 19-ஆம் நூற்றாண்டு வரையில் இருந்தது. முகம்மதியர் ஆட்சிக் காலத்தில் அரபி மொழிச் சொற்களும், உருதுமொழிச் சொற்களும், பாரசீக மொழிச் சொற்களும் தமிழில் கலந்தன.

அசல், அந்து, அமல், அமானி, அமீனா, அய்வேஜ், அனாமத்து, ஆஜர், ஆசாமி, இனாம், உக்கும், கசாலா, கஜானா, கச்சேரி, காரர், கலால், காய்தா, கைது, சராப்பு, சாமான், டபேதார், தகரார், தயார், தாக்கீது, நகல், நபர், பாரி, பாக்கி, பைசல், மாசூல், மாமூல், மாஜி, முன்சீப்பு. யாதாஸ்து, ஜில்லா, தாலூகா, ஜாமீன், வாயிதா, வக்கீல், வக்காலத்து, வசூல், ஜாஸ்தி, ஜாமீன் முதலியவை அரபிச் சொற்கள். இவை தமிழில் வழங்கப்படுகின்றன. இவையன்றி இன்னும் பல அரபிச் சொற்கள் உள்ளன.

அம்பாரம், ஆகர், ஆப்காரி, குமாஸ்தா, குலாம், சர்க்கார், சிப்பந்தி, சிரஸ்தார், சுமார், தர்காஸ்து, தஸ்தாவேஜு, நமூனா, பந்தோபஸ்து, பிரியாது, பேஷ், ரஸ்தா, வாபஸ், ஜமீன், ஜவாபு, ஜாகிர், ஜோர் முதலிய சொற்கள் பாரசீக மொழிச் சொற்கள்.

இலாகா, செக்குபந்தி, டாணா, தண்டா, தபால், துக்கடி, பட்டுவாடா, பந்தி முதலியவை இந்துஸ்தானி சொற்கள்.



இவ்வாறு முகம்மதியர் ஆட்சி காலத்தில் அரபி, பாரசீகம், இந்துஸ்தானிச் சொற்கள் பல தமிழில் கலந்து வழங்குகின்றன.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஏறக்குறைய 150 ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சி நமது நாட்டில் ஏற்பட்டிருந்தது. அரசாங்க பாஷையும் ஆங்கில மொழியாக இருந்தது இதன் காரணமாகப் பல ஆங்கிலச் சொற்கள் தமிழில் கலந்தன.

ஆக்டு, ஆபீஸ், லா, கவர்னர் காப்டன், கோர்ட்டு, காபி' ரைட்டர், பட்லர், ஜட்ஜி, சம்மன்' பினல்கோடு பேனா, பென்ஸில்' பேபர், ரோட், மோட்டார், பஸ்' ரயில்வே, ஸ்டேஷன், போலீஸ்' ஸ்கூல், காலேஜ், ஹோட்டல், சோடா, சோப்பு முதலியவை ஆங்கிலச் சொற்கள்.

இவ்வாறு தமிழிலே பிற மொழிச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. தமிழில் மட்டுமல்ல. உயிருடன் வழங்கி வருகிற எல்லா மொழிகளிலும் அயல் பாஷைச் சொற்கள் கலப்பது இயல்புதான். இவ்வாறு கலப்புண்ட பிறமொழிச் சொற்களில் பெரும்பாலும் பேச்சு வழக்கில் மட்டும் உள்ளன. இலக்கியத்தில் புகுந்த பிறமொழிச் சொற்கள் மிகச் சிலவே.

எந்தப் பாஷையும் இயற்கையாகவே வளரவேண்டும். தமிழ் மொழியும் அதன் இயற்கைக்கேற்றவாறு வளர வேண்டும். தமிழ் திராவிட இனத்தைச் சேர்ந்த மொழி. தமிழ் இனத்தைச் சேர்ந்த வேறு திராவிட மொழிச் சொற்கள் தமிழில் கலப்பதால் அது தூய்மை கெடாது. தூய கன்னடம், தூய தெலுங்கு, தூய மலையாளம், தூய துளு போன்ற திராவிட மொழிச் சொற்கள் (தமிழில் இல்லாதவை) தமிழுடன் கலப்பதனால் தமிழ் மொழி தூய்மை கெடாது ஏனென்றால் இவை எல்லாம் ஓரின மொழிகள். ஆனால், திராவிட இனமில்லாத வேற்று மொழிச் சொற்கள் தமிழில புகும்போது, தமிழ் இயற்கைக்கு ஏற்ப மாறுதல் அடைந்து கலக்கவேண்டும். அப்படியில்லையானால் மொழியின் இயற்கை அழகு குறையும். இதனால்தான் அயல் மொழிகள் தமிழில் கலக்கும்போது இன்னின்னபடி மாறுதல் பெறவேண்டும் என்று தமிழில் இலக்கணம் வகுத்தார்கள்.

"தனித் தமிழ்" "தூய தமிழ்" என்று கூறுகிறவர்களை, தூய தமிழை விரும்பாதவர்கள், தமிழ் வெறியர் என்று கூறுகிறார்கள். தனித் தமிழ், தூய தமிழ் வேண்டும் என்பது வெறி ஆகுமா? இருக்கிற தமிழ்ச் சொற்களைக் களைந்துவிட்டு அதற்குப் பதிலாக வேற்றுமொழிச் சொற்களை வழங்குவது கூடாது என்பதுதான் தனித் தமிழ், தூய தமிழ் என்று [illegible] நீர் இருக்க ஜலம் [illegible] இருக்க பூமி ஏன்? நாள் இருக்கத் தினம் ஏன்?

186336

திங்கள் இருக்க மாதம் ஏன்? ஆண்டு இருக்க வருஷம் ஏன்? கோயில் இருக்க ஆலயம் ஏன்? திருமணம் இருக்க விவாஹம் ஏன்? மனைவி இருக்க பார்யை ஏன்? குழந்தை இருக்க சிசு ஏன்? தாய் தந்தையர் இருக்க மாதா பிதாக்கள் ஏன்? இவ்வாறு நாற்றுக் கணக்கான சொற்களைக் காட்டலாம். மொழி வளர்ச்சி என்றால் கண்டகண்ட குப்பை கூளங்களை எல்லாம் கலந்துவிடுவதா? இதுவா மொழி வளர்ச்சி? தூய தமிழ் வேண்டும் என்பவர்களைத் "தமிழ் வெறியர்" என்று கூறுகிறார்கள் வேண்டாதவைகளை எல்லாம் வேண்டும் என்று கூறுகிற பைத்தியக்காரர்கள்!

துருக்கி தேசத்துத் துருக்கி மொழியிலே, ஏராளமான அரபி மொழிச் சொற்கள் சேர்ந்துவிட்டன. அண்மைக் காலத்தில் விழிப்படைந்து தேசாபிமானமும் பாஷாபிமானமும் ஏற்பட்ட பிறகு, வேண்டப்படாத குப்பை கூளங்கள் துருக்கி மொழியில் கலந்துவிட்டதை அறிந்து, வேண்டப்படாத அரபி மொழிகளைக் களைந்துவிட்டு, தூய துருக்கி மொழியில் நூல்களை எழுதவேண்டும் என்று துருக்கியர் சட்டம் இயற்றியுள்ளார்கள். அவர்களைப் பார்த்து "இவர்கள் துருக்கி வெறியர்கள்" என்று அறிவுள்ளவர் யாரும் கூறுவதில்லை. அவரவர் தங்கள் தங்கள் மொழியைத் தூய்மையுடைய[illegible] வைத்துக்கொள்ள வேண்டும். இதுதான் முறையும் ஒழுங்கும் அழகும் ஆகும். இப்படிக் கூறுவதனாலே, பிறமொழிச் சொற்களைக் கலக்கக் கூடாது, என்று சொல்வதாகக் கருதக் கூடாது. பிறமொழிச் சொற்களை தேவையில்லாத அயல் மொழிச் சொற்களைச் சேர்க்காதே; இன்றியமையாமல் வேண்டியுள்ள அயல் மொழிச் சொற்களை எடுத்துக் கொள் என்பதே தூய தமிழ் வேண்டுவோர் கருத்து.

இப்போது பிறமொழிச் சொற்கள் அதிகமாகத் தமிழில் கலக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம், இப்போது உலகம் "சுருங்கி" விட்டது. இருப்புப் பாதை, மோட்டார், நீராவிக் கப்பல், ஆகாய விமானம் முதலிய போக்குவரத்துச் சாதனங்களும், டெலிபோன், தந்தி, ரேடியோ முதலியவைகளும் தூரத்தையும் நேரத்தையும் பெரிதும் சுருக்கி விட்டன. மாதக் கணக்கான தூரத்தில் இருந்த நாடுகளும் தேசங்களும் இப்போது நாட்கணக்கில் மணிக் கணக்கில் குறுகி விட்டன. பரந்து விரிந்துள்ள இப்பெரிய உலகம், விஞ்ஞானம் தந்த வாய்ப்புகளின் பலனாக, அக்கம் பக்கத்து வீடுகள் போலக் குறுகிவிட்டது. உலகத்தில் உள்ள எல்லா நாட்டாரும், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. அதன் [illegible] புதிய புதிய கருத்துக்களும் எண்ணங்களும் பெறுகிறோம்



ஆகவே, புதிய புதிய சொற்களைப் பெறுகிறோம். இந்தச் சூழ்நிலையிலிருந்து தமிழும் தமிழரும் தப்பித்துக்கொள்ள முடியாது. ஒதுங்கிக் கிடந்தாலோ முன்னேற முடியாது.

இரண்டாவது காரணம், மேல் நாடுகள் எல்லாம் விஞ்ஞானத்தில் வெகுதூரம் முன்னேறிவிட்டன. மேலும் மேலும் அவை முன்னேறிக்கொண்டுள்ளன. கீழ் நாடுகள் எல்லாம் இப்போது மேல் நாட்டின் விஞ்ஞானத்தை எட்டிப் பிடிக்க விரைவாக முயற்சி செய்கின்றன. மேல் நாட்டுடன் சமமாக இருக்கவேண்டுமானால், கீழ் நாடுகள்வெகு வேகத்தோடு, மின்னல் வேகத்தோடு முன்னேற வேண்டும். முன்னேற வேண்டுமானால், மேல் நாட்டுச் சயன்ஸுகளும் விஞ்ஞானங்களும் கீழ்நாட்டு மொழிகளில் இடம் பெறவேண்டும். அதாவது விஞ்ஞானக் கலைச் சொற்கள் கீழ்நாட்டுப் பாஷைகளில் புகவேண்டும். தமிழ் மொழியிலும் விஞ்ஞானக் கலைச் சொற்கள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே, விஞ்ஞானம் வளம் பெற்றுள்ள மேல் நாட்டு மொழிகளிலிருந்து கலைச் சொற்கள் நமக்கு இன்றியமையாமல் தேவைப்படுகின்றன. அக் கலைச் சொற்களை எங்கிருந்து பெறுவது?

நமது நாட்டிலே சிலர், விஞ்ஞானக் கலைச் சொற்களைச் சமஸ்கிருத மொழியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். இது என்ன புதுமை! சமஸ்கிருதத்திலே சமயதத்துவங்கள் சம்பந்தமாகப் பல சொற்கள் இருப்பது உண்மைதான். ஆனால், மோட்டார், ரயில், ஸ்டீமர், ஆகாய விமானம், ரேடியோ, டெலிபோன், மின்சாரம், அணுக் குண்டு முதலிய விஞ்ஞான சாஸ்திரங்கள் சமஸ்கிருத மொழியில் உண்டா? இந்த விஞ்ஞானச் சொற்களைச் சமஸ்கிருதத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று கூறுவது என்ன விந்தை! சமஸ்கிருதப் பைத்தியம் சிலருக்கு அளவு கடந்து போய்விட்டது.

விஞ்ஞானமும் சயன்ஸும் மேல் நாடுகளிலே அண்மைக் காலத்தில் வளர்ச்சியடைந்தவை. விஞ்ஞானக் கலை நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி, ருஷியா போன்ற மேல் நாட்டு மொழிகளில்எழுதப்பட்டுள்ளன. எனவே இந்த மேல் நாட்டு மொழிகளிலே இந்த விஞ்ஞானக் கலைச் சொற்கள் உள்ளன. விஞ்ஞானம் வளர்ந்த நாட்டில் உள்ள விஞ்ஞானக் கலைச் சொற்களை, அங்கிருந்தே நாம் பெற்றுக் கொள்வதுதான் அறிவுடைமை. அப்படி எடுக்கப்படும் விஞ்ஞானச் சொற்களைத் தமிழ் மரபுக்கு ஏற்றபடி அமைத்துக்கொள்ளவேண்டும். அதற்குத் தகுந்தவர், மேல் நாட்டு விஞ்ஞான நூல்களையும் தமிழ் மொழியையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தவர்களே.

(54-ம் பக்கம் பார்க்க)

# திராவிட வைரம்

(தொண்டைமான்)

பிரிட்டனின் மணிமுடியில் நூறுண்டு காலமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அந்தக் கோகினூர் வைரமும், மாவீரன் நெப்போலியன் தன் பட்டாக்கத்தியிலே பதிந்திருந்த வைரமும் பாரசீகம், ருஷ்யா, ஆஸ்திரியா முதலிய நாட்டு மன்னர்களின் மணி மகுடங்களில் ஒளி வீசிய வைரங்களும் — நம் தென்னாட்டின் வைரங்கள்! திராவிடத்தின் வைரங்கள்!!

ஆங்கில ராணி விக்டோரியா, அகிலத்தை நடுங்க வைத்த வீரன் நெப்போலியன், டில்லியைக் கொள்ளையடித்த பாரசீக வீரன் நாதர்ஷா, டில்லி சுல்தான்களான பாபர், அக்பர், ஜகாங்கீர், ஷாஜகான், அவுரங்கசீப், ருஷ்யப் பேரழகி இரண்டாவது காத்தரின் —ஆகியோர் நம் நாட்டு வைரங்களை அளவு கடந்து மதித்தினர்—அணிந்து அழகு பார்த்தனர்!

---

(53-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் பிறமொழிச் சொற்கள் தேவையா? ஆம். தேவை, தேவை. ஆனால், குப்பை கூளங்கள் அல்ல. இன்றியமையாத, மிகத் தேவையாகவுள்ள வேற்று மொழிச் சொற்கள் தேவை. அதிலும், தமிழ் மரபுக் கேற்றபடி அமைந்த விஞ்ஞானச் சொற்கள் மிக மிகத் தேவை. —"பாரதி"

---

ரோம், கிரீஸ்—முதலிய பழம் பெரும் நாகரிக நாடுகள் எல்லாம் வைரத்தைப்பற்றியே கேள்விப் பட்டிராதபோது, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தென்னாட்டில் வைரம் எடுக்கப்பட்டு வந்தது! ரோம் நாட்டுக்கு, இந்நாட்டு வைரமணிகளை அனுப்பி அறிமுகப்படுத்தி வைத்த பின்புதான் — ரோமாபுரி அரண்மனைகளில், அந் நாட்டு அழகிகள், ராணிகள் ஆகியோரின் அணிகளில் - பொதுவாக ரோம் நாடு முழுவதும் வைரமணிகள் செல்வாக்குப் பெற்றன!

பிளினி என்ற ரோம் நாட்டாசிரியன் கி. பி. 100-ல், "இயற்கை நூல்" என்னும் ஓர் ஏட்டில், "நவ மணிகளுள் மிக மிக மதிப்பு மிக்கது வைரம — அது மன்னர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடியது. ஆறு கோணம், இரட்டைக் கோபுரம் ஆகிய உருவங்களில் அமைந்துள்ள ஆறுவித வைரங்கள் மிக மிக அழகாக, ஒளி நிறைந்தவையாக இருக்கின்றன" என்று, நம் வைரங்களைப் பற்றி விவரித்திருக்கிறான்!

கார்சியா டெ ஓர்டா (Cearcia de Oreta) என்ற ஒரு போர்த்துகல் தேசத்தான் முதன் முதலாக 1565-ல் நம் நாட்டு வைரங்களைப் பற்றி நன்கு எழுதினான்! "உலகிற்கோர் உன்னதமான பொருள்" என்று புகழ்ந்து கூறினான்!



டாவர்னியர் (J.B. Tavernier) என்ற ஒரு பிரெஞ்சு நாட்டுக்காரன் அடிக்கடி நம் நாட்டுக்கு ஓடி வந்தான். உலகத்தைச் சுற்றினான். 1638 - 1665 — இந்த இடைக் காலத்தில் அவன் இந்தியாவுக்குப் பல தடவைகள் ஓடி வந்தான்!

வந்தான் என்று சரித்திரம் சொல்கிறது. ஏன் தெரியுமா? அவன் ஓர் ரத்தின வியாபாரி! உலக மன்னர்களுக்கும், பிரபுக்களுக்கும் இந்த நாட்டு வைரங்களையும், ரத்தினங்களையும் வாங்கிச் சென்று கொடுத்தவன்! "டாவர்னியர், பிரயாணி உருவிலே வந்திருக்கலாம்—ஆனால் அவனது நோக்கமெல்லாம விலை உயர்ந்த வைரங்களை, ரத்தினங்களை விலைக்கு வாங்கி, கீழ் நாடுகளின் கீர்த்திமிக்க மன்னர்களுக்கும், ஐரோப்பிய அரசர்கட்கும் விற்று வணிகம் செய்வதே" என்று வரலாற்றாசிரியர்கள் வரையறுத்துக் கூறுகின்றனர்!

18-ம் நூற்றாண்டுவரை (கி. பி. 1700), உலகில்-தென்னாட்டைத் தவிர வேறெங்குமே வைரம் விளையவில்லை! அப்படி விளைந்ததாக எந்த ஆதாரத்தையும் காணோம்! அதுவரை உலகமெங்கும் திராவிடத்தின் வைரங்களே ஜ்வலித்துக்கொண்டிருந்தன!

1725-ம் ஆண்டில்தான் அமெரிக்க மண்ணில் வைரம் கண்டு பிடிக்கப்பட்டது! 1767-க்குப் பிறகுதான் ஆப்பிரிக்காவில், ஆரஞ்சு நதிக்கரையில் ஆதர்ஸ்டோன் (Atherstone) என்பவர் வைரத்தைக் கண்டு பிடித்தார்! அதுவரை அவனியெங்கும் ஒளி வீசியது தென்னாட்டு வைரமே!

நம் நாட்டில் வைரம் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது — என்ற வினாவிற்கு, "ஆரம்ப காலம் முதல்" "மிகப் பழைய காலத்திலிருந்து" என்ற வார்த்தைகளை வரலாற்றாசிரியர்கள் பதிலாகக் கூறுகின்றனர்! 2000 ஆண்டுகளுக்கு முன்பு-என்பது மட்டுமே நிச்சயமாகத் தெரிகிறது!

## வரலாற்றில் நம் வைரங்கள்!

சரித்திரத்தில் பல சுவைமிக்க அத்தியாயங்களை நமது வைரங்கள் உண்டாக்கியிருக்கின்றன; காதலை, கவிதையை, கோபத்தை, கொடூரத்தை—பல பயங்கரப் படுகொலைகளை, கொள்ளைகளை — எல்லாம் இந்த நாட்டு வைரங்கள் சந்தித்திருக்கின்றன! அவற்றில் சுவைமிக்க ரசமான ஒரு சில கதைகளை இங்கு தருவோம்.

### 1. கோகினூர் வைரம்

'கோகினூர்' என்பதற்கு 'மலை விளக்கு' (Light of Mountain) என்று பொருள். குவாலியர் நாட்டுக்காரர் இந்த வைரத்தை இங்கிருந்து வாங்கி வைத்திருந்தார்கள். 1526-ல் டில்லி சுல்தான் பாபர், குவாலியர் நாட்டுப் படைகளை வென்றான். சரண் புகுந்த அந்த நாட்டுப் படை வீரர், தங்கள் உயிருக்கு ஈடாக, 'கோகி

னூர்' வைரத்தை, அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்!

பாபர் அதை வாங்கிச் சென்றான். அலங்காரமாக வைத்துக் கொண்டான். காலம் ஓடியது. பாபர் மறைந்து விட்டான். ஆனால் கோகினூர் மறையவில்லை. அவனுக்குப் பிறகு, அவனுடைய சந்ததியில் வந்த அக்பர் அதை வைத்திருந்தார். அக்பர் இறந்ததும், ஜகாங்கீர் தனது அன்பு மனைவி நூர்ஜகானுக்கு அதை அணிந்து அழகு பார்த்தான்! அவனுக்குப் பிறகு ஷாஜகான் - மும்தாஜ் தம்பதிகள் வசம் இருந்தது கோகினூர்!

அதன் பிறகு அவுரங்கசீப்பிடம் அது சென்றது. ஏறக்குறைய 1526 முதல் 1736 முடிய சுமார் 210 ஆண்டுகள் டில்லி அரச வம்சத்திடம் கோகினூர் இருந்தது! எண்ணற்ற நவமணிகளும், ரத்னங்களும் அதனுடன் கூட இருந்தன!

ஆடு, மாடு மேய்த்துக்கொண்டிருந்த நாதர்ஷாவுக்கு, இந்த ரத்னங்களின்மேல் ஆசை பிறந்தது. வீரனாக மாறினான் - பாரசீகத்தைக் கைப்பற்றினான் - 1737-ல் டில்லிமேல் படையெடுத்தான்—50 ஆயிரம் பேர்களை ஒரே நாளில் கொன்றான்—டில்லியையே சூறையாடினான் — டில்லி அழிந்தது - கஜானாவுக்குச் சென்றான். கோகினூர் முதலிய மணிகளை எடுத்துக்கொண்டு பர்சியா திரும்பினான்! 75 ஆண்டுகள்வரை கோகினூர் பாரசீகத்தில் இருந்தது!

1813-ல் பஞ்சாபை ஆண்டு வந்த, ரஞ்சித் சிங், அந் நாட்டு மன்னனுடன் உறவு பூண்டு, தந்திரமாக கோகினூரை வாங்கிக் கொண்டான். பூரி ஜகநாதர் கோயிலுக்கு அதைக் கொடுக்கப் போவதாக ரஞ்சித் சிங் கூறிக் கொண்டிருந்தான். ஆனால், கொடுப்பதற்குள் இறந்துவிட்டான்! சுமார் 36 ஆண்டுகள் வரை கோகினூர் பஞ்சாப்பில் ரஞ்சித் சிங் வம்சத்தாரிடமிருந்தது!

1848-49-ல் சீக்கியப் போரில், பஞ்சாப் ஆங்கிலேயரிடம் தோற்றது - அடிமையாகியது! அப்போது, இந்திய வைஸ்ராயாக இருந்த டெல்ஹௌஸி கோகினூரை வாங்கி, 1850-ல் விக்டோரியா மகாராணிக்கு அனுப்பினார்! பூரி ஜகநாதர் ஏமாந்து விட்டார்!!

1850 முதல் கோகினூர் இங்கிலாந்து மன்னர்களின் மணிமுடியில் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது! ஆரம்பத்தில் அதன் எடை 186 காரட்; இப்போது 105 காரட்டாகக் குறைத்து விட்டார்கள்!

கோகினூர் கடந்த 450 ஆண்டுகளில் நூற்றுக்கு மேற்பட்ட மன்னர்களைச் சந்தித்து விட்டது- அவர்கள் எல்லாம் மறைந்து போனார்கள் — மண்ணாகி விட்டார்கள்! ஆனால் கோகினூர் மங்காமல், மறையாமல் முன்னிலும் பன் மடங்காக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. எலிசபெத் ராணியின் முடியில் இப்போது அது ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது!



## 2. உர்லாவ் வைரம்

இந் நாட்டில் ஓர் பார்ப்பனக் கோவிலில் - ஒரு கடவுள் சிலையின் கண்ணில் — இருந்த வைரம் இது! இதை பிரெஞ்சு வீரன் ஒருவன் திருடிக்கொண்டு ஓடி விட்டான்! வழியில் அவனிடமிருந்து ஒரு கப்பல் தலைவன் திருடி ருஷ்ய வீரன் உர்லாவி (Orlove)யிடம் 90 ஆயிரம் பவுனுக்கு விற்று விட்டான்!

ருஷ்ய இளவரசி 2-ம் காத்தரின்மீது அவனுக்குப் 'பேரன்பு' உண்டு! அந்த அன்புக்கு அடையாளமாக, இவ்வைரத்தை உர்லாவ் அவளுக்குப் பரிசளித்தான்; அவ் வைரத்துக்கும் அவன் பெயரே இடப்பட்டது!

சுமார் 195 காரட் எடையுள்ள அவ்வைரம் ருஷ்ய மன்னர்களின் மகுடத்தில் பதிக்கப்பட்டது — இன்றும் உள்ளது!

## 3. பிட் வைரம்—பிரான்சில்!

சென்னை மாநில கவர்னராக இருந்த பிட், இந்த வைரத்தை 24,000 பவுன் கொடுத்து வாங்கினார். பிரான்சு ரீஜண்ட் ஆர்லியன்ஸ் பிரபுவிடம் 1,35,000 பவுனுக்கு விற்றார்! ஆரம்பத்தில் அதன் எடை 400 காரட்! இப்போது வெட்டப்பட்டு 137 காரட்டாக இருக்கிறது. இது தான் புகழ் வீரன் நெப்போலியன் பட்டாக்கத்தியில் இடம் பெற்றது! கிருஷ்ணா மாவட்டத்தில்-பார்டியாலா என்ற இடத்தில் எடுக்கப்பட்டது!!

## 4 "பெரிய முகாலயம்"

இதன் எடை 787 காரட்; பின்பு 280 காரட்டாகத் துண்டிக்கப்பட்டது. 1,665ல் அவுரங்கசீப்பின் கஜானாவில் இதை டாவர்னியர் பார்த்தானாம்! "எமிர் ஜம்லாவினால் ஷாஜகானுக்குக் கொடுக்கப்பட்ட வைரம் இது" என்று டாவர்னியர் சொல்கிறான்! இதை இப்போது காணோம்!

## 5. அக்பர்ஷா வைரம்

ஆரம்ப எடை 116 காரட்! 71 காரட் ஆக ஆக்கப்பட்ட பின், 35 ஆயிரம் பவுனுக்கு பரோடா கெய்க்வாருக்கு விற்கப்பட்டது!

## 6. சான்சி வைரம்

சுமார் 54 காரட் எடையுள்ளது. ஸ்பெயின் தேசத்து மன்னனிடம் இருக்கிறது.

## 7. நிஜாம் வைரம்

முன்பு 440 காரட்டாக இருந்தது. இப்போது 277 காரட்டாக இருக்கிறது; மற்றொன்று 67 காரட் எடையுள்ளது. இதன் விலை 1,65,000 ரூபாய்! அனந்தப்பூர் மாவட்டத்தில் 1881ல் வஜ்ஜிரகரூர் என்ற இடத்தில் எடுத்த வைரம் இது!

## 9. கிரேட் டேபிள் வைரம்

நமது வைர மண்டலத்துக்கு 1642ல் வந்த டாவர்னியர், இங்கே 242 காரட் எடையுடன் இவ்வைரத்தைக் கண்டானும்! இப்போது இவ்வைரம் 186 காரட் எடையுடன் பாரசீக மன்னர்களின் மணிமுடியில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது!

## 10. தாஜ் எமா

எடை 146 காரட்—இதுவும் பாரசீகத்தில், அதே முடியில் உள்ளது!

## 11. அழகான நீல வைரம்

67 காரட் எடையுள்ளது—டாவர்னியர் ஐரோப்பா கொண்டு சென்ருன்—திருடு போய்விட்டது—காணப்படவில்லை.

## 12. பிளாரெண்டைன்

13 காரட் எடையுள்ள இந்தக் கவர்ச்சிமிக்க மஞ்சள் வைரம் இன்று ஆஸ்திரியா தேசத்து மன்னனின் மகுடத்தில் ஒளி தருகிறது!

பிரிட்டன், பிரான்சு, பாரசீகம், ருஷ்யா, ஆஸ்திரியா, ஸ்பெயின் முதலிய நாடுகளில் ஜொலிக்கும் இந்த முக்கியமான 12 வைரங்களின் சரித்திரமே-உலக வைர மணிகளின் சரித்திரமாகும்!

தென்னாட்டு வைரத்தின் கதையே—உலக வைரத்தின் சரித்திரமாகும்! ஆங்கிலக் கலைக் களஞ்சியம் இதைப்பற்றி அழகுபட வர்ணித்திருக்கிறது!

* * *

வைரம் விலைமிக்க நவமணிகளுள் ஒன்று! மன்னர்களுக்கும், பிரபுக்களுக்கும் மட்டுமே கிடைக்கக்கூடியது; சாதாரண மனிதர்களுக்குத் தேவையற்றது-எனவே அது அவசியமில்லை என்ற வாதத்தை சிலர் எழுப்பக் கூடும்!

காரணம், நம்மில் பலர் நினைக்கிருர்கள் வைரமணி வெறும் அணிகலனுக மட்டும்தான் உபயோகப்படுகிறது என்று! ஆனல் மனிதன் வைரத்தின் உதவியின்றி விமானம், கப்பல், பாலம், அணை அல்லது எப்பெரிய தொழிற்சாலையோ செய்ய முடியாது-என்பது உண்மையாக இருக்கிறது!

போருக்கு இன்றியமையாத சில கருவிகளைப்போல், தொழில் துறைக்கு வைரம் மிக மிக முக்கியம்! வைரத்தின் தொழில்துறை உபயோகம் நாள்தோறும் வளர்ந்து செல்கிறது. உலக வைரத்தில் 75 சதவீதம் இன்று, தொழிற்சாலைகளுக்கே பயன்படுகிறது!

உருக்கு, டங்ஸ்டன், மாங்கனீஸ், வனடியம் — முதலிய கடினமான உலோகங்களை ஒரு நொடியில் உடைக்க வேண்டுமா? அதற்கு உதவி செய்வது வைரம்!

கண்ணுக்குப் போட்டுக் கொள்ளுகிருேமே அந்தக் கண்ணுடி, பல் கருவிகள்—இவை செய்ய வைரத்தின் உதவி தேவை!



காரை இயக்க, கப்பலை ஓட்ட, கடிகாரம் செய்ய, பாறைகளைப் பிளக்க, விமானத்தை ஓட்ட, மின்சாரக் கம்பி இழுக்க, குண்டு வீச, 'ரோலர்'களை நகர்த்த—முதலிய எல்லா வேலைகளுக்குமே வைரமணிகள் பயன்படுகின்றன!

அதுமட்டுமல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக வைரத்தை வைரம் தான் அறுக்க முடியும்! அழகிகளின் அணியாகி கண்டாரை வசீகரிக்கும் கவர்ச்சியைக் கொடுக்க முடியும்! இந்த ஒப்பற்ற குணங்களால், உலகில் அது பெரிய மதிப்பைப் பெற்றுவிட்டது! ஆகவே வைரம் விளையும் நாடு வளத்தைப் பெற முடியும்—மக்கள் வாழ்வையடைய முடியும்! உலகில் உன்னதமான மதிப்பைப் பெற முடியும்!

## நமது வைர பூமி

திராவிடத்தின் வடகோடியில்—கோல்கொண்டா என்ற ஒரு சிறிய நாடு இருந்தது. (இப்போதும் அந்தப் பெயராலேயே அது சிறிய ஊராகவே இருக்கிறது) அந்நாட்டு எல்லைக்குள் இன்றைய கிருஷ்ணு, அனந்தப்பூர் முதலிய மாவட்டப் பகுதிகள் அடங்கியிருந்தன! இந்தப் பகுதிகளிலே தான் ஏராளமான வைரமணிகள் புதைந்து கிடந்தன — சுரங்கம் அமைத்து எடுக்கப்பட்டன. உலகமெலாம் அனுப்பப்பட்டன!

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடியில்—மிகச் சிறந்த ரத்தினங்கள் உயர்ந்த நவமணிகள் மிகுதியாகக் கிடைத்தன என்று மற்றொரு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது!

கிருஷ்ணு மாவட்டத்தில், கொல்லூரில் இருந்த கொல்லூர் வைரச் சுரங்கம் மிகப் பெரியது! 164 ல்,கொல்லூர் சுரங்கத்துக்கு வந்து பார்த்த டாவர்னியர் கூறுவதைக் கேளுங்கள்:—"கொல்லூர் பெரியதோர் வைரச் சுரங்கம்-இதற்கு முன் நூருண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. இங்கே 60 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிருர்கள்! இந்த வைரச் சுரங்கங்களால் கோல்கொண்டாக் கோட்டையே வைரமணிகளின் வணிக மண்டலமாக (Market) விளங்குகிறது!" என்று கூறுகிருன்!

கொல்லூர், பார்டியாலா, சேலம், வாணியம்பாடி, வஜ்ஜிரகரூர். முனிமடகு,பங்கனப்பள்ளி-முதலிய இடங்களில் கிடைத்த வைரங்கள்தான் அந்த உலகப் புகழ் பெற்ற வைரங்களாகும்!

இந்தப் பகுதிகள்தான், இந்தப் பூமிதான் நமது வைர பூமியாகும்!

கால மாறுதல்களாலும்-தென்னாட்டவர் கண்விழிப்பில்லாத காரணத்தாலும், இந்தச் சுரங்கங்கள் இன்று காணப்படவில்லை; ஆனல் வைரம் மிகப் பெரிய அளவில் இருக்கவே செய்கிறது! "இந்திய பூகத்துவ ஆராய்ச்சிக் குறிப்புகள்" (Geological survey of India) என்ற நூலில் இருந்து

இந்த உண்மை நன்கு புலனாகிறது!

இந்திய இயற்கை வள துணை அமைச்சர் K. D. மாளவியா, டில்லி பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போது (5–5–53ல்) "இந்திய பூதத்துவ ஆராய்ச்சிக் குறிப்புகளிலிருந்து, சென்னை மாநிலத்தில், முக்யமாக கர்னூல், கடப்பை, பல்லாரி, அனந்தப்பூர்- மாவட்டங்களில் வைரம் இருப்பதாகத் தெரிகிறது. இது பற்றிய முழு விவரம் சேகரிக்கும் பொறுப்பு மாகாண சர்க்காருடையது" என்று கூறியிருக்கிறார்!

தென்னாட்டிலே மீண்டும் ஓர் முறை, தென்னாடு முழுவதும் பூதத்துவ ஆராய்ச்சியைச் சீரிய முறையிலே நடத்தவேண்டும்; வைரமணிப் பிரதேசங்களைக் கண்டறியவேண்டும். வைரச் சுரங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தி வைரமணிகளை விளைவிக்கவேண்டும்- நமது வைரங்களை மீண்டும் தரணியெங்கும் ஒளி வீசச் செய்யவேண்டும்!

—"தீப்பொறி"

---

## அறிவுக் கதிர்

செயற்கரிய செய்த பெரியவர்களை, மரணம், எப்போதாவது சாகடிக்க முடிகிறதா? இல்லை! கிடையாது! அவர்கள்தான் மரணத்தைச் சாகடித்து விடுகிறார்கள்.

—எட்மண்ட் ஸ்பென்சர்

எனது உள்ளம்—அதுவே எனக்குக் கிடைத்துள்ள சாம்ராஜ்யம்! அது தருகிற இன்பத்துக்கு ஈடு இணை, இந்த உலகத்திலே வேறு கிடையாது.

—எட்வர்ட் டையர்

நாம் விரும்புவதைப் பெறுவது; பெற்றபின் அதை மகிழ்ச்சியோடு அனுபவிப்பது; இந்த இரண்டும்தான வாழ்க்கையின் இலட்சியங்கள். முதல் இலட்சியத்தைப் பலராலும் அடைய முடிகிறது. ஆனால் இரண்டாவது இலட்சியத்தை அறிஞர்களால் மட்டுமே அடையமுடிகிறது.

—பெர்சல் சுமித்

# Proceedings of The Director of Public Instruction, Madras.

R. O. C. No. 940–B 7/58. Dated 5-12-1958.

GOVERNMENT OF MADRAS.

---

## ABSTRACT.

*ELEMENTARY EDUCATION —Re-organisation—Levy of Fees–Abolition of it in standards I to V from the School Year 1959–60 orders issued.*

Health Education and Local administration Department.

G. O. Ps. No. 2124. Education. Date...the 29th November 1958.

READ :—

G. O. No. 1976. Education Dated 30th November 1957.
From the Director of Public Instruction No. 940—B 7/58.
Dated. 15th May 1958.

ORDER :—

Article 45 of the constitution of India requjres that the state shall endeavour to provide within a period of ten years from the...commencement of the constitution for Free and compulsory education for all children until they complete the age of fourteen years. With reference to the Directive principle of state policy embodied in this Article the Elementary Education Reforms Committee of 1955 recommended that no Elementary schools under Public or private management should be allowed to levy fees. The Legislature committee on the white paper on education has after a detailed examination of the issues involved recommended that the objective compulsory enrolment should be limited to the first five years of schooling and that five year-schooling should be made compulsory in every village in every town of the state by 1965—66. The Government have accepted this recommendation. In respect of the qnestion of prohibiting the levy of fees the Legislature committee did not make a specific recommendation.

2. The Government have considerd this question. They observe that though it follows from article 45 of the constitution—that Elementary Education should be compulsory as well as free it need not necessarily be made compulsorily free. In other words. provision should continue to exist in the educational system of the state for enabling those who prefer to educate their children in special schools which levy fees; recognition should not be witheld from such schools while they fulfil relevent academic conditions merely for the reason that fees are levied in such schools.

3. Consistently with the foregoing Government pass the following orders :—

(i) No fee shall be levied from any pupil for tuition in standards(or classes or grades) I to V of any school (Lower Elementary, Higher Elementary, Junior Basic, Senior Basic or special) under public management.

(ii) In regard to schools under private management two types of schools with standards I to V shall be recognised (viz.) (a) Fee levying schools and (b) non-fee levying schools.

(iii) The Non—Fee levying institutions shall be eligible for recognition as well as the usual grant-in-aid according to the rule and orders in force.

(iv) The Fee-levying schools may levy such rates of fees they deem fit. They shall not however be eligible for any grant-in-aid (or compensation grant) in respect of standards I to V. Academic recognition for these Institutions will be granted by the competent authority. The schools should conform to the syllabus prescribed ; and fulfil such other conditions as may be attached to academic recognition.

4. These orders will apply to tuition fees only and will not be applicable to special fees which may be levied as per rules and orders for the use of the library, medical Inspection, games or for any other special convenience.

5. These orders shall come into force from the school year 1959—60. The Director of Public Instruction is requested to bring these order to the notice individually of the private management in charge of all schools where tuition fees are at present levied from pupils in *Standards*—(or classes or grades) I to V and ascertain from them in due time whether they elect to remain as fee—levying Institutions on a non—aided basis in reepect of standards I to V or to function as non-fee levying Institutions on an aided basis.

6. The above orders will not apply to primary sections of high schools in respect of which separate orders will issue after the report of the ad—hoc committee for the revision of the Grant—in—Aid rules received.

7. This order is issued with concurrence of finance department vide their U...No. 59221—EA/58—a Finance dated 25th June 1958.

(by order of the Governor)

K. Ghulam Mahmeed,
Secretary to Government.

# சென்னை மாவட்ட எயிடட் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

---

17–12–58 புதன்கிழமையன்று திரு. A. K. S. சர்மா அவர்கள் தலைமையில், G. ராஜமன்னார் செட்டி பாடசாலையில் மாலை 6 மணி யளவில் கூட்டம் கூட்டப்பெற்று கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. G. O. No. P. S. 2124 (29-11-58) பிரகாரம் அரசாங்கம் சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இலவசமாக ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்கும் திட்டத்தை இச் சங்கம் ஆதரிக்கிறது. ஆனால், 1-6-59 முதல் எயிடட் ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்காமலும் அந்த சம்பள நஷ்ட ஈட்டிற்கு உண்டான தொகையை அரசாங்கம் ஈடு செய்யாமல் பள்ளி நிர்வாகிகள் பாடசாலைகளை நடத்துவதென்பது இயலாதென்பது மட்டுமல்ல; பாடசாலைகளை மூடவேண்டியதைத் தவிர, வேறு வழி காண இயலவில்லை என்பதை மிக வருத்தத்தோடு இச்சங்கம் அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்கிறது.

2. பாடசாலைக் கட்டடங்களுக்கான வாடகை, ஆசிரியர்களுக்குக் கட்டவேண்டிய பிராவிடெண்ட் பண்ட் தொகை, அதிகப்படிச் சம்பளம், பிள்ளைகளைக் கொண்டுவரும் ஆயாக்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம், மற்ற செலவுகளையும், இதுவரை பிள்ளைகளிடத்திலிருந்து வசூலிக்கப்பட்ட சம்பளத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டது. சம்பளம் வசூலிக்கப்படவில்லையானால், ஆசிரியர்களுக்காக அரசாங்கம் கொடுக்கும் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு எயிடட் பாடசாலையை நடத்த முடியாது. 31-1 59-லிருந்து ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய சட்டப் பூர்வமான நோட்டீசை முன் எச்சரிக்கையாகக் கொடுக்கவேண்டியதே தவிர வேறு வழி இல்லை. ஆகலால் உடனடியாக இவ்வுத்தரவை ரத்து செய்யும்படி இச்சங்கம் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கின்றது.

3. 1959—ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சென்னை மாவட்ட எயிடட் பள்ளி நிர்வாகிகள் சங்க மாநாடு ஒன்று கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# எயிடட் பள்ளி நிர்வாகிகளுக்கு ஓர் வேண்டுகோள்

---

நமது சென்னை இராச்சியத்தில் சுமார் 20,000 ஆரம்பப் பள்ளிகளில் 11,000 ஆரம்பப் பள்ளிகள் நிர்வாகிகளால் நடத்தப்படும் எயிடட் பள்ளிகளாகும். இவைகள் பெரும்பாலும் ஆசிரியர்களுக்காகக் கொடுக்கப்படும் அரசாங்கத்தின் மாதாந்திர கிராண்ட்டைக் கொண்டே நடப்பவை. ஆனால், சுமார் 1000க்கு மேற்பட்ட எயிடட் பாடசாலைகள் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிக்கப்பட்டு நடத்தப்படுபவை. இவை பெரும்பாலும் சென்னை, மதுரை, திருச்சி, போன்ற முனிசிபல் எல்லைக்குள் நடத்தப்படும் பாடசாலைகளாகும். இப்பாடசாலைகளுக்கு முக்கியமான செலவு கட்டட வாடகை. அரசாங்கம் கொடுக்கும் கிராண்ட்டைக் காட்டிலும் ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. மற்றச் செலவுகளும் கிராமாந்திர பாடசாலைகளைக் காட்டிலும் நகரப் பாடசாலைகளில் அதிகப்படுகிறது. இப்புதிய அரசாங்க உத்தரவு சற்றேறக்குறைய 20,000 ஆரம்ப ஆசிரியர்களையும் சுமார் 1500 நகர எயிடட் பாடசாலைகளையும் மிக மிகப் பாதிக்கின்றது. இவ் உத்தரவு சம்பந்தப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்டால் இப்படிப் பாதிக்கப்படும் விஷயம் தங்களுக்கு விளக்கப்படவில்லையென்றும், இதைப்பற்றி விளக்கமாக விஷயங்கள் தெரிவிக்கப்படுமானால் இதை மறுபடியும் கவனிக்க இடமுண்டு எனவும் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் உடனடியாக எயிடட் பாடசாலை நிர்வாகிகள், பாதிக்கப்பட்ட எயிடட் பாடசாலை ஆசிரியர்கள் ஜில்லாவாரியாக மாநாட்டைக் கூட்டி அந்தந்த வட்டாரத்திலுள்ள **M. L. A.** க்களையும் **M. L. C.** க்களையும் தலைமை தாங்கச் செய்து தக்க தீர்மானங்களை நிறைவேற்றி கல்வி மந்திரிக்கும் கல்வி அதிகாரிக்கும் உடனடியாக அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

186336

இப்படிக்கு
சென்னை மாகாண எய்டட் பள்ளி
நிர்வாகிகள் சங்கம்

**P. வீரராகவன்**

தலைவர் (ஆரம்பக் கல்வி அலுவலகம்)
சென்னை-1.

---

*Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,*
*at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.*